# பிரதேச சபை திருத்தச் சட்டமும் மலையக தமிழ் சமூகம் உள்வாங்கலும்

## 2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிரதேச சபைகள் திருத்தச் சட்டம்



LET US WORK FOR SOCIAL CHANGE

ISD

Institute of Social Development

© ISD Kandy, Sri Lanka

ISBN 978-624-6087-01-2
March, 2022

Published by:
Institute of Social Development (ISD)

Printed by :
www.printsrilanka.com

Institute of Social Development,
No. 246/4, Ranawana Road,
Katugastota.
Sri Lanka.
Tel : +94 81 207 1288

# பிரதேச சபை திருத்தச் சட்டமும் மலையக தமிழ் சமூகம் உள்வாங்களும்

## 2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிரதேச சபைகள் திருத்தச் சட்டம்

சமூக அபிவிருத்தி நிறுவகம்

# முன்னுரை

இன்று மலையகத் தமிழரென தம்மை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள மலையக மக்களின் முன்னோர்கள் 1824ஆம் ஆண்டு முதல் 1941ஆம் ஆண்டு வரை இலங்கையின் மலைப்பகுதிகளில் கோப்பி, தேயிலை, இறப்பர் போன்றவற்றினை பயிரிடவும் அதேவேளை நகர்புறங்களில் பணியாற்றவும் பிரித்தானியர்களினால் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களாவர். இலங்கையும் இந்தியாவும் பிரித்தானியரின் காலனியாக இருந்தமையினால் அவர்கள் பிரித்தானிய பிரசைகளாகவே கருதப்பட்டனர். பிரித்தானியரின் காலனிகளான மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, பிஜி, மொறீசியஸ், பிரிட்டிஷ், கயான போன்ற நாடுகளைப் போலன்றி இலங்கையின் வட, கிழக்கில் பூர்வீகத் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஏனைய நாடுகளில் குடியமர்த்தப்பட்ட இந்தியத் தமிழ் மக்கள் சிங்கப்பூர் தமிழர், மலேசியத் தமிழர், தென்னாப்பிரிக்கத் தமிழர், மொறீசியஸ் தமிழர் என்று அழைக்கப்பட்டதுடன் இலங்கையில் குடியமர்ந்த இந்திய தமிழர் மட்டும் தொடர்ச்சியாக ஐந்து தலைமுறைக்குப் பின்னரும் இந்தியத் தமிழர் என்றே சட்ட ரீதியாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

பிரித்தானியர் சர்வசன வாக்குரிமையை 1930 களில் இலங்கைக்கு அறிமுகப்படுத்துகையில் சர்வசன வாக்குரிமையை இலங்கையில் குடியமர்ந்த இந்தியத் தமிழர்களுக்கும் இவ்வுரிமையை வழங்கத் தீர்மானித்தனர், இதனை சிங்கள அரசியல் தலைவர்களும், ஒரு சில இலங்கைத் தமிழ் தலைவர்களும் எதிர்த்தனர். இவ்வெதிர்ப்புகளை புறக்கணித்து பிரித்தானியர் சர்வசன வாக்குரிமையை இந்தியத் தமிழர்களுக்கு வழங்கினர். சர்வசன வாக்குரிமையை வழங்குவதற்கு முன்பதாக பிரித்தானியா இலங்கையில் மன்னர் ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்த கிராம நிர்வாக முறையினைக் கவனத்திற்கொண்டு அதனை கிராம சபை கட்டளைச் சட்டமாக 1871இல் பிரகடனப்படுத்தியது. இச்சட்டத்திற்கு 1924 ஆம் ஆண்டு இலக்கம் 09 எனும் கிராமசபை திருத்த கட்டளைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் அதனை வலுப்படுத்தியது. இத்திருத்தக் கட்டளைச் சட்டத்தைக் கொண்டு வருகையில் இக்கட்டளைச் சட்டம் தொடர்பில் உள்ளுர் அரசியல் தலைவர்களிடம் ஆலோசனைக் கேட்கும் போது உள்ளுர் தலைவர்கள் கிராம சபைக்குள் தோட்ட மக்கள் உள்ளடக்கப்படக் கூடாது என பிரித்தானிய அதிகாரிகளுக்கு கூறினர்.

இக்கருத்திற்கு எதிராக இந்தியத் தொழிலாளர்களின் நலன்களை கவனிக்கும் அதிகாரியாக இந்தியாவில் நியமிக்கப்பட்டிருந்த பாஜ்பாய் எனும் அதிகாரி இலங்கை தோட்டங்களில் வாழும் இந்தியத் தமிழர்களும் பிரித்தானியப் பிரசைகளே. எனவே அவர்களுக்கு இவ்வுரிமை மறுக்கப்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. எனக்கூறி அவர்களை உள்வாங்காமைக்கான காரணத்தை தரும் கடிதம் ஒன்றையை அனுப்பினார். இந்திய தொழிலாளர்களை கிராம சபைக்குள் உள்ளடக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் கடுமையாக இருந்த டி.எஸ். சேனாநாயக்க மற்றும் எஸ்.டபுள்யு.ஆர்.டி.பண்டார நாயக்கவும், பாஜ்பாயின் கருத்துக்கு பதிலளிக்கையில் இந்திய தோட்டத் தமிழர்களுக்கு கிராம சபையில் பங்குபற்றிய அனுபவங்கள் இல்லை. அதனால் அவர்களுக்கு கிராம சபையின் கீழ் செயற்பட போதிய அனுபவம் இருக்காது என பதிலளித்தனர். இதனை ஏற்றுக்கொள்ளாத பாஜ்பாய் இந்தியத் தொழிலாளர்கள் இந்திய பஞ்சாய முறைமையின் கீழ் வாழ்ந்தவர்கள். உங்களது கிராம சபை முறையும் அவ்வாறானது தான். எனவே அவர்களை கிராம சபைக்குள் உள்ளடக்குங்கள் என பதிலனுப்பினார். ஆனால் அதனை டி.எஸ்.சேனாநாயக்கவும் எஸ்.டபுள்யு.ஆர்..டி..பண்டார நாயக்கவும் ஏற்கவில்லை. இம்மறுப்பினை எதிர்த்த திரு.பாஜ்பாய் இந்தியத் தொழிலளார்கள் இலங்கைக்கு செல்வதை தடை செய்தார். அதனால் இரண்டு வருடங்கள் இலங்கைக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் அனுப்பப்படவில்லை. பின்னர் பிரித்தானியர் அவரை ஒருவாறு சமாதானப்படுத்தியப் பின்னர் மீண்டும் இலங்கைக்கு தொழிலாளர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்

இந்நிலையில் 1924 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமசபை சட்டத்தில் இந்திய தொழிலாளர்கள் சட்ட ரீதியாக ஒதுக்கப்பட்டனர். இச்சட்டத்தின் கீழ் யார் கிராம சபையின் பயனை பெறுவதற்கு தகுதியற்றவர் எனக் குறிப்பாக உள்ளடக்கப்பட்டது. இக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 58 இல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. இந்தியன் தொழிலாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தொழிலாளர்கள், பெண்கள் மற்றும் அவ்வாறு குறிப்பிடப்படும் தொழிலாளர்களின் பிள்ளை அல்லது வயதுடையோர் அல்லது அத்தொழிலாளர்களின் இயலாமையுடைய உறவினர்கள் இச்சட்டத்தின் கீழ் நீக்கப்பட்டோராக அடையாளப்படுத்துவர் எனக் குறிப்பிடப்பட்டது. அச்சட்டத்திற்குப் பின்னர் 1930 களில் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமை கட்டளைச் சட்டத்தின் போதும் இவ்விரு தலைவர்கள் இந்தியத் தொழிலாளர்களுக்கு இவ்வுரிமை வழங்குவதை பெரிதும் தடுக்க முனைந்தனர். இந்தியத் தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்கக் கூடாது என சட்டசபையில் கூறினர்.

இச்சந்தர்ப்பத்தில் பலம் பொருந்திய தொழிற்சங்கத் தலைவராகவும் சட்ட சபையின் அங்கத்தவராகவும் இருந்த ஏ.ஈ.குணசிங்க அவர்கள் இந்தியத் தொழிலாளர்களுக்கு சர்வசன வாக்குரிமை அளிப்பது தப்பில்லை என வாதித்ததினால் இத்தலைவர்கள் இருவரும் சர்வசன வாக்குரிமையை வழங்க இணங்கினர். இதன் பயனாக சட்டசபைக்கு தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாய்ப்பு இந்தியத் தொழிலாளர்களுக்கு கிடைத்தது. ஆனால் அவர்களுக்கு கிராம சபையில் பங்குபற்ற வாய்ப்பு மறுக்கப்பட்டது. சர்வசன வாக்குரிமை வழங்குவதை தடுப்பதில் தோல்வி கண்ட இரு தலைவர்களும் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தப்பின் அதே வருடம் நவம்பர் மாதம் பிரசாவுரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களது குடியுரிமையைப் பறித்தனர். இதன் மூலம் சட்டசபைக்கு (அன்றைய பாராளுமன்றம்) இந்தியத் தமிழர்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாய்ப்பை இல்லாதொழித்தனர்.

இந்நிலை 1977 ஆம் ஆண்டு வரைத் தொடர்ந்தது. 1964 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சிறிமா-சாஸ்திரி சட்டத்தின் விளைவாக இந்திய வம்சாவழி மலையகத் தமிழர்களின் குறிப்பிட்ட பிரிவினர் வாக்குரிமைப் பெற்றுதுடன் 1947 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதன் முதலாக 1977 நடைபெற்ற பொதுத்தேர்தல் மூலம் பாராளுமன்றத்திற்கும் பின்னர் முறையே மாகாணசபை மற்றும் பிரதேச சபைகளுக்கும் தம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பை பெற்றனர். பிரசாவுரிமை சட்டத்திற்கு 1988 ஆம் கொண்டு வரப்பட்ட இன்னுமொரு திருத்தச் சட்டத்தின் விளைவாக மேலும் ஒரு பிரிவினர் இலங்கை பிரசையாகினர். இறுதியாக 2003 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரசாவுரிமை திருத்தச் சட்டத்துடன் எஞ்சியிருந்த நாடற்ற இந்தியத் தமிழர்களும் நாட்டின் பிரசையாகினர். ஆயினும் கிராம சபை சட்டத்தில் எவ்வித மாற்றமும் கொண்டுவரப்படவில்லை. கிராம சபைக்கு பதிலாக 1987 ஆம் ஆண்டு இலக்கம் 15 பிரதேசசபை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏலவே கிராம சபைக்கு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்குள் உள்ளடக்கப்பட்டன. அதன்படி கிராம சபை கட்டளைச் சட்டத்தில் ஓரங்கட்டப்பட்ட தோட்டத்துறை வாழ் மக்கள் கிராம சபையின் பயன்களைப் பெறுவதும் தடை செய்யப்பட்டது.

இப்பின்புலத்தில் 1989 ஆம் ஆண்டு முதலாவது மத்திய மாகாணசபை உருவாக்கப்பட்டதுடன் அதற்கு மலையக தோட்டவாழ் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்பினர். மாகாண சபையில் நிதி ஒதுக்கீடு செய்யும் பொழுது தோட்டங்களில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள மாகாணசபைக்கு அதிகாரமில்லை என மாகாணசபை முதலமைச்சர் கூறினார். அதன் பின்னர் 1991 ஆம் ஆண்டு முதலாவதாக நடாத்தப்பட்ட பிரதேசசபைத் தேர்தலில் மலையக மக்கள் இரு சபைகளை முறையே அம்பகமுவ மற்றும் நுவரெலிய பிரதேசசபையின் அதிகாரங்களையும் ஏனைய பிரதேச சபைகளில் கணிசமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றனர். ஆனால் பிரதேச சபையின் நிதியினைக் கொண்டு அபிவிருத்தி திட்டங்களை தோட்டப்பகுதிகளில் மேற்கொள்ள முடியாது என முதற் பிரதேசசபை அமர்விலேயே கூறப்பட்டது. இதனை மலையக அரசியல் தலைமைகள் பொருட்படுத்தவில்லை. இரு பிரதேச சபைகளினது ஆட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கீழ் இருந்தமையினாலும்

அதன் தலைவர் திரு. சௌம்மிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் அவரது அமைச்சிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதேசபை பிரதி நிதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதன் ஊடாக சிற்சில அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இச்செயற்பாடு தொடர்ந்ததுடன் 1994 ஆம் ஆண்டு முதல் மலையக தோட்ட மக்கள் மத்தியில் தேர்தல் கல்வியூட்டல் பணிகளை மேற்கொண்டவேளை பிரதேசசபை சட்டத்தினை பற்றி கற்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பிரதேச சபையின் அதிகாரங்களைப் பற்றி அறிந்தபோது கிராமசபை கட்டளைச் சட்டத்தின் கீழ் மலையக தோட்ட வாழ் மக்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையுடன் பிரதேச சபைக்குள்ளும் ஒதுக்கப்பட்டமையை அறியக்கூடியதாக இருந்தது. இவ்வொதுக்கலை பலப்படுத்துவதற்காக பிரதேசசபை சட்டத்தின் 33ஆவது பிரிவில் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளமையை என்னால் அறிய முடிந்தது. இதனை அறிந்தவுடன் இச்சட்டத்தினை திருத்த வேண்டும் என்ற பரப்புரையை 1994ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட போதிலும் இக்கருத்தினை எந்தவொரு அரசியல்வாதிகளும் கவனத்தில் கொள்ளவில்லை. 2008 ஆம் ஆண்டு உடபலாத்த பிரதேசசபை கலைக்கப்பட்டவேளை குறிப்பிடப்பட்ட குற்றச் சாட்டுக்களில் பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 33 க்கு முரணாக பணிகளை மேற்கொண்டமையும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பின்னரே நான் கூறிவந்த உண்மையை மலையக அரசியல்வாதிகள் ஏற்றுக்கொண்டனர். 1994 ஆம் ஆண்டு பிரதேச சபையின் 33 ஆவது பிரிவிற்கு திருத்தம் கொண்டுவர வேண்டும் என்பதற்காக மேற்கொண்ட பரப்புரையும் ஏற்புரையும் 2018 ஆம் ஆண்டே வெற்றியடைந்தது. 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பரப்புரையை மேற்கொள்ள ஜேர்மனியைச் சார்ந்த திருமதி.இங்ரிட் ஒஸ்டமனும் அவர் சார்ந்த பிரட் போர் த வேல்ட் நிறுவனமும் உதவி வந்தமையை இவ்விடத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அதேபோல் என்னுடன் தோளோடு தோள் நின்று உழைத்த சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் மற்றும் பெருந்தோட்டத்துறை சமூக மாமன்ற அங்கத்துவ அமைப்புகளுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இச்சிறு பதிவு மலையக மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டமைப்பு ஓரங்கட்டலையும், அவர்கள் பெற்ற வெற்றியினையும் அறிந்துக்கொள்ள வாய்ப்பளிக்கும்.

பெ. முத்துலிங்கம்
நிறைவேற்று பணிப்பாளர்
சமூக அபிவிருத்தி நிறுவகம்
கண்டி
இலங்கை

## பிரதேச சபை சட்டத்திற்கான திருத்தம் சாதனை மைல்கல்

பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரை அவர்கள் மத்திய அரசின் நேரடியான கட்டுப்பாட்டினதும் மேற்பார்வையினதும் கீழ் இயங்கும் பிரதேசசபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தீர்மானமெடுக்கும் விவகாரங்களில் நேரடிப் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் மிக அரிதாகவே காணப்படுகின்றது. அரைகுறைவான பிரஜாவுரிமை அந்தஸ்து, அனைத்து ஆட்சிக்கட்டமைப்புகளிலும் தொடர்ச்சியாக உள்வாங்கப்படாமை, நீண்டகால நாடற்றத்தன்மை மற்றும் சட்டக்கொள்கை, பாரபட்சம் இவை அனைத்தும் இந்நிலைக்கு பங்களிப்புச் செய்துள்ளன.

2003 இல் வழங்கப்பட்ட சட்டபூர்வமான பிரஜாவுரிமையுடன் சில இசைவொத்த அபிவிருத்திகள் காணப்பட்டாலும் பிரதேசசபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளினால் சட்டரீதியான சேவைகளை பெற்றுக்கொள்வதில் 2018 செப்டம்பர் வரை நிறுவன ரீதியான கொள்கை, பாகுபாடுகளுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. 1987ல் பிரதேசசபைகள் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து 2018 செப்டம்பர் வரை குறிப்பிட்ட சட்டத்தின் சில விதிகள் இச்சமூகத்தினரை பிரதேசசபை வரம்பிற்குள் கொண்டு வரப்படுவதை வெளிப்படையாகவே தடுத்தன. எனவே 9 மாவட்டங்களிலும் இயங்கிய பிரதேசசபைகளிலும் இவர்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையிலும் இச்சமூகத்தினர் நாட்டின் உரிமையுள்ள பிரஜைகள் என்ற அடிப்படையில் பிரதேசசபைகளின் சேவைகளுக்கான தரப்பினராக இருக்கவில்லை. சரியாகச் சொல்வதெனின், இத்தகைய பாரபட்சமான நகர்வுகள் முதன் முதலாக 1871ம் ஆண்டில் கிராம சபைகள் கட்டளைச்சட்டம் அறிமுகம் செய்யப்பட்டதுடன் தொடங்கின என்பதுடன் இத்தடைகள் அவர்களின் ஜனநாயக பங்கேற்பை வாக்களிப்புடன் மட்டுப்படுத்தியதுடன் அடிமட்ட ஆட்சிக்கட்டமைப்புகள் வாயிலான மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதற்கு அவர்களுக்கு முட்டுக்கட்டையாயின.

இத்தகைய பின்னணியிலேயே சமூக அபிவிருத்தி நிறுவக நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. பெ.முத்துலிங்கத்தின் இடையறாத முயற்சி மற்றும் தலையீட்டின் பயனாக வெளிக்கொண்டு வரப்பட்ட இந்த நீண்டநாள் பிரச்சினை பின்னர் சிவில் சமூக அரசியல் மற்றும் ஏனைய ஒன்றியங்களின் பெரிதளவிலான கவனத்தைப்பெற்றது.

2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பிரதேசசபை சேவைகள் பெருந்தோட்ட சமூகத்தை சென்றடைவதில் காணப்படும் சட்டச்சிக்கலை இனங்கண்ட சமூக அபிவிருத்தி நிறுவகம் முழு சமூகத்தையும் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பாதித்துக்கொண்டிருக்கும் முக்கியமான இந்த பிரச்சினையை அணுகுவதற்கான வழிவகைகள் தொடர்பில் தெளிவான ஆதாரங்களின் அடிப்படையிலான நியாயப் பிரச்சாரத்தை முன்னெடுத்தது. சமூக அபிவிருத்தி நிறுவகம் இப்பிரச்சினையை இனங்கண்டு வெளிக்கொணரவில்லையெனின், குறிப்பிட்ட திட்டமிட்ட பாரபாட்சம் மேலும் இரண்டு தசாப்தங்களுக்கு தொடர்ந்திருக்கும். அதிமுக்கியமாக, சமூக அபிவிருத்தி நிறுவகம் இப்பிரச்சினையை மேலும் ஆய்விற்குட்படுத்தும் வகையில் ஆதாரபூர்வமாக சில ஆய்வு வேலைதிட்டங்களை முன்னெடுத்ததுடன் இந்த பாரபட்சமான சட்டத்திற்கு எதிராக போராடும் வகையில் பெருந்தோட்ட மக்களை தெளிவுப்படுத்தி அணிதிரட்டுவதற்கான சமூக மட்ட இயக்கங்களை பெருந்தோட்ட பிரதேசங்களில் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று சேவைகளை வழங்குவதில் பிரதேசசபைகள் இக்குறிப்பிட்ட சமூகத்தினருக்கு எதிராக கடைபிடிக்கும் பாரபட்சமான செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுப்படுத்தும் எழுத்து மூல மன்றாட்டங்களை சமர்ப்பிப்பதுடன் ஆளுங்கட்சி, எதிர்கட்சி மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் சமூக அபிவிருத்தி நிறுவகம் நடாத்திய சந்திப்புகள் இறுதியில் நல்லாட்சி அரசு அமைவுடன் அரசியல் முக்கியதுவத்தை பெற்றதுடன், சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் வழிகாட்டலுடன் தமிழ் முற்போக்கு முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்பிரச்சினையை முன்னெடுப்பதில் தீவிர ஈடுபாட்டுடன் செயற்பட்டார்கள்.

மலையக அரசியல்வாதிகளை இப்பிரச்சினை தொடர்பில் தெளிவுப்படுத்துவதுடன், சட்டத்தை திருத்துவதற்கு தேவையான முறையில் பாராளுமன்றத்தில் பிரச்சினையை சமர்ப்பிப்பதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அனுசரனையைப் பெற்றுக்கொள்வதற்குமாக கூட்டங்களை ஏற்பாடு செய்து நடாத்தியது. சமூக அபிவிருத்தி நிறுவகம் மேற்கொண்ட முன்முயற்சி இத்தலைப்பின் கீழ் சில ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு எம்மை தூண்டின. இன்று இப்பிரச்சினைக்கு சட்டரீதியான தீர்வு கண்டு பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டின் பிரஜைகள் என்ற உரிமையுடன் பிரதேசசபைகளின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை பெற்றுள்ளார்கள். கடந்த சில வருடங்களில் இத்திருத்தம் குடிநீர் மற்றும் சுகாதார வசதி வாய்ப்புகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை அடைவதற்கு இச்சமூகத்தினருக்கு உதவியுள்ளது. அதேவேளை இச்சமூகத்தினை சார்ந்த பிரதேசசபை உறுப்பினர்கள் இத்திருத்தம் தொடர்பில் அதன் முக்கியத்துவம் தொடர்பில் ஆழ்ந்த அறிவினைப் பெற்று இச்சமூகத்தினரின் அபிவிருத்திக்கு தேவையான சமமான பௌதீக, நிதிவள ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்கான முறையில் பிரதேசசபை அமர்வுகளில் காத்திரமான வகிபாகங்களை மேற்கொள்ள வேண்டியது தவிர்க்கப்பட முடியாத கடமை என்பது எனது கருத்தாகும்.

அதேவேளை சட்டரீதியான பாகுபாடு அகற்றப்பட்டுள்ளதெனினும், பிரதேச சபைகளில் சில நடைமுறைப் பிரச்சினைகள் காணப்படுவதுடன் பெருந்தோட்ட முகாமைத்துவ தரப்பிலிருந்து சில தடைகள், குறுக்கீடுகள் இச்சமூகத்தினர் சட்டத் திருத்தத்தின் ஊடான முழுப் பயனையும் அனுபவிப்பதற்கு தடையாயுள்ளன. எனவே பெருந்தோட்ட பிரதேசங்களுக்கு இத்திருத்தத்தின் ஊடான பயன்கள் முழுமையாக சென்றடைவதை உறுதி செய்வதற்கான போராட்டங்களையும் இயக்கங்களையும் முன்னெடுப்பதற்கான தேவை காணப்படுகின்றது.

இப்பிரச்சினை தீர்வு நோக்கிய விழிப்புணர்வுக் கல்வியை, நியாயப் பிரச்சாரங்களை, இயக்கங்களை முன்னெடுப்பதில் இவ்வெளியீடு உதவும் என நான் உறுதியாக நம்புகின்றேன். இறுதியாக இக்காலோசிதமான வெளியீட்டிற்காக சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கும் திரு.பெ.முத்துலிங்கத்திற்கும் எனது பெரும் பாராட்டுக்கள்.

கலாநிதி ரமேஸ் ராமசாமி
சிரேஸ்ட விரிவுரையாளர்.
ஆட்சி, கொள்கைக் கல்வி
பேராதனை பல்கலைக்கழகம்
பேராதனை
இலங்கை

## 2018 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரதேசசபை சட்டத்திற்கான திருத்தமும் அதன் பயனுள்ள தாக்கமும்

பிரதேசசபை சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் பெருந்தோட்ட சமூகத்தின் குறிப்பாக தேயிலை இறப்பர் தோட்டங்களில் வாழ்பவர்களின் அரசியற் பயணத்தின் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். ஆற்றல் மிகு அடிமட்ட அதிகார வளப்பகிர்வு நிறுவனப் பொறிமுறையான உள்ளூர் ஆட்சி மன்றத்தை அமைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட நிலையிலும் அந்நிறுவனங்கள் வளமான பயன்பாடுகளை அனுபவிக்கும் வாய்ப்பு இச்சமூகத்தினருக்கு மறுக்கப்பட்டமை வியப்பிற்குரியதாகும். மறுவார்த்தைகளில் கூறுவதாயின் இம்மக்கள் அவர்களின் வாக்குப் பலத்தால் இந்நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தெரிவு செய்தார்கள். சில பிரதேச சபைகளை அமைக்கும் அளவிற்கு அவர்களின் வாக்குப்பலம் இருந்தது. எனினும் அவர்களின் பிரதேசங்களுக்கு தேவையான அபிவிருத்தி தேவைகளை அந்நிறுவனங்கள் ஊடாக நிறைவு செய்துகொள்ள முடியவில்லை.

இது அவர்களின் ஜனநாயக உரிமைகளை மீறிய செயலாகும். எனினும் 2018ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதேசசபை சட்டத்திற்கான திருத்தம் இந்த நெடுங்கால குளறுபடியை நிவர்த்தி செய்துள்ளது. இத்திருத்தத்தை இலக்காகக் கொண்டு பல்வேறு வகையான பிரச்சாரங்களை மேற்கொண்ட சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. பெ.முத்துலிங்கத்திற்கும் நாம் நன்றியுடையவர்களாவோம்.

இவ்வேளையில் குறிப்பிட்ட சட்டத்திருத்தத்தை பெற்றுக்கொள்வதில் கண்டுள்ள வெற்றி பிரச்சினை தீர்விற்கான ஒரு பகுதி மட்டுமே என்பதை மனதில் கொள்வது முக்கியமாகும். பிரதேசசபைகள் எந்தவிதமான அபிவிருத்தி செயற்பாட்டையும் பௌதீக ரீதியாக நடைமுறைப்படுத்துவதில் பிரதேசசபைகள் எதிர்கொள்ளும் இயலாமை பெருந்தோட்ட முகாமைத்துவ முறையுடன் தொடர்புடையதாகும்.

பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் பெருந்தோட்ட முகாமைத்துவ - அரச நிர்வாகம் என்ற இருமுறை நிர்வாக அமைப்பிற்குள் வாழ்கின்றார்கள். ஒரு பக்கம் நாட்டின் பிரஜைகளாக உள்ளனர். மத்திய அரசுகளின் சட்ட விதிகளுக்கேற்ப செயற்படும் அதேவேளை, பெருந்தோட்ட தொழிலாளர்களாக பெருந்தோட்ட முகாமைத்துவம் அவர்கள் மீது பெரும் செல்வாக்கையும் அதிகாரத்தையும் செலுத்துகின்றது. இது தொழிலாளர் - தொழில் தருனர் ஒப்பந்த உறவின் அடிப்படையிலானது மட்டுமல்லாது, பல தலைமுறைகளாக அவர்கள் வாழும் நில - லய அறை உடைமையாளர் வதிவாளர் அடிப்படையிலும் அமைந்ததாகும். தொழிலாளர் குடும்பங்களின் கருவறை தொடக்கம் கல்லறை வரையிலான முழு வாழ்க்கையும் அவர்களின் சமூகக் கலாச்சார செயற்பாடுகளும் பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கு சொந்தமான தோட்டத்தையும் லயத்தையும் மையமாகக் கொண்டு சுழல்வதனால் தொழிலாளர் குடும்பங்கள் (தோட்டத்தில் தொழில் புரிந்தாலும் இல்லாவிடினும்) தோட்ட முகாமைத்துவங்களின் சட்ட விதிகளுக்கு கட்டுப்பட்டேயாக வேண்டிய நிலையில் உள்ளார்கள்.

சில தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு வீடமைப்புத் திட்டங்களின் கீழ் சொந்தமாக வீடுகளைப் பெற்றுள்ளார்கள். எனினும் வீடுகளை சொந்தமாகக் கொண்டுள்ளமை மட்டும் பெருந்தோட்ட

முகாமைத்துவத்தின் நிர்வாக முறைமையின் கெடுபிடிகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு அவர்களுக்கு உதவக்கூடியதாக காணப்படவில்லை.

இந்நிலையில் சட்டத்திருத்தத்துடனான இசைவொத்த நகர்வு வரவேற்புக்குரியதெனினும் திருத்தத்தின் நல்விளைவிற்கான அமுல்படுத்தல் பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது. எனவே அதில் கவனம் செலுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும். இது சமூக அபிவிருத்தி நிறுவகம் போன்ற அமைப்புகளினதும் அதேவேளை ஒத்தக்கருத்துடைய தனி நபர்களினதும் தொடர்ச்சியான பிரச்சாரத்தை கோருகின்றது.

கௌரி பழனியப்பன்
சமூக அபிவிருத்தி ஆலோசகர்
முன்னாள் சமூகவியல் விரிவுரையாளர்
கொழும்பு பல்கலைக்கழகம்
கொழும்பு
இலங்கை

## 1987 பிரதேச சபை சட்டத்தின் தடையை நீக்கியமை ஒரு மைல்கல்

அரச சேவைகள் தோட்டத்துறையை சென்றடையாமைக்கு காரணியாயமைந்த 1987 பிரதேசசபைகள் சட்டத்தின் 33வது பிரிவு என்ற சட்டத்தடை நீக்கப்பட்டமை ஒரு மைல்கல் நிகழ்வாகும். பிரதேசசபைகளால் மேற்கோள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் தோட்டத்துறையை சென்றடையாமைக்கு ஏதுவான சட்டக்காரணிகள் சம்மந்தப்பட்ட பங்காளர்களால் உணரப்படவில்லை. மத்திய மாகாண முதலமைச்சரால் 2008ல் உடபலாத்த பிரதேசசபை கலைக்கப்பட்டமை பிரதேசசபை சட்டத்தின் 33வது பிரிவின் தாக்கத்தை வெளிக்கொண்டு வந்தது.

இந்நிலையில் இப்பிரிவை பிரதேசசபை சட்டத்திலிருந்து நீக்கும் நோக்கில் (இவ் ஆவணத்தில் தரப்பட்டுள்ள) பல்வேறு செயலமர்வுகளை பலதரப்பு, இருதரப்பு, தனியார் சந்திப்புக்களை சம்மந்தப்பட்ட பல்வேறு பங்காளர் மத்தியில் மேற்கொண்டது. பிரதேசசபை சட்டத்தின் பாரபட்சமான 33வது பிரிவை நீக்குவதை இலக்காகக் கொண்ட சலிப்பூட்டும் நீண்ட செயற்பாடுகளின் போது முகம் கொடுக்க நேர்ந்த சிரமங்களையும் சந்தித்த தடைகளையும் இச்சிற்றேடு தனிப்படுத்திக் காட்டுகின்றது.

சமூக அபிவிருத்தி நிறுவகம் அனைத்து மட்டங்களிலும் பிரயோகித்த அழுத்தங்களையும் இந்த ஆவணம் தெளிவுப்படுத்துகின்றது. கல்வியாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மாகாண சபைகளின் உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பல்வேறு முறைகளில் திருத்தத்திற்கான முக்கியத்துவத்திற்காக குரல் கொடுத்தார்கள்.

இந்த திருத்தத்திற்கான மசோதா பெருந்தோட்ட பிரதேசங்களுக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகாரசபை அமைப்பு மசோதாவுடன் பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட போது முழு சபையும் திருத்தத்திற்கும் ஆதரவு தெரிவித்தது. சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் வேண்டுகோளுக்கு அமைய நானும் சமூகவியலாளர் கௌரி பழனியப்பனும் தோட்ட தொழிலாளர்களை பெரும்பான்மையினராக கொண்டுள்ள அம்பகமுவ, ஹாலிஎல, பன்வில பிரதேசசபைகள் வழங்கும் சேவைகள் மீதான கற்கையொன்றை 2013 இல் மேற்கொண்டோம்.

சமூக அபிவிருத்தி நிறுவகத்தினால் குறிப்பாக அதன் நிறைவேற்று பணிப்பாளர் திரு. பெ.முத்துலிங்கத்தினால் இந்த மைல்கல் வெற்றிக்காக வழங்கப்பட்ட பங்களிப்பு பதிவு பெற, அங்கீகாரம் பெற தகுதியுடையதாகும்.

எம். வாமதேவன்
முன்னாள் செயலாளர்
**தோட்ட உட்கட்டமைப்பு, வீடமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சு**
**இலங்கை**

## 2018 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரதேசசபை திருத்தச் சட்டமும் அதன் பின்புலமும்

1989 ஆம் ஆண்டு மத்திய மாகாணத்திற்கான முதலாவது மாகாணசபை தேர்தல் நடாத்தப்பட்டது. இவ் மாகாணசபை தேர்தலின் போது பதினொரு உறுப்பினர்களை மலையக மக்கள் தெரிவு செய்து மாகாண சபைக்கு அனுப்பினர். முதலாவது மாகாணசபையில் மலையக மக்களின் பிரதிநிதி ஒருவருக்கு அமைச்சர் பதவியொன்றும் வழங்கப்பட்டது. அதற்கமைய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களின் மகன் இராமநாதன் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுக்கு மாகாண கல்வி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. மாகாணசபையின் முதலாவது நிதி ஒதுக்கீட்டு அமர்வின் போது அபிவிருத்தி வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக கலந்துரையாடப்பட்ட வேளை மலையக பிரதிநிதிகள் மலையக தோட்டப்பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யும்படி கோரினர். முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டிருந்த டி.எம்.டப்ளியு.திசாநாயக்க அவர்கள் (முன்னாள் தொழில் திணைக்கள அலுவலர்) தோட்டப்புறங்களில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ய மாகாணசபைக்கு அதிகாரமில்லை. அதனால் தோட்ட குடியிறுப்பு பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது எனக் கூறலானார்.

அனைத்து மலையக பிரதிநிதிகளும் இதனை எதிர்த்ததுடன் இப்பிரச்சினையை மறைந்த அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றனர். அமைச்சர் தொண்டமான் அவர்கள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவிடம் இது பற்றி எடுத்துக் கூறியதுடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜே.ஆர்.ஜயவர்தன மலையக பிரதிநிதிகள் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள நிதி வழங்கும்படி மத்திய மாகாண முதல்வருக்கு ஆணையிட்டார். அதன் பின்னர் முதலமைச்சர் மலையக பிரதிநிதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தார். அதன் பின்னர் மாகாணப் பிரதிநிதிகள் மலையக தோட்டப்புறங்களில் சிறு மட்ட அபிவிருத்தி பணிகளை தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியினைக்கொண்டு மேற்கொண்டனர். ஆனால் முதலமைச்சர் குறிப்பிட்ட சட்டரீதியான சிக்கல் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இப்பின்புலத்தில் 1991 ஆம் ஆண்டு பிரேதச சபைக்கான தேர்தல் நடைப்பெற்றதுடன் நுவரெலிய மற்றும் அம்பகமுவ பிரேதேச சபைகளின் ஆட்சியதிகாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கைப்பற்றியது. கண்டி, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை உள்ளிட்ட மாவட்டங்களில் காணப்பட்ட பிரதேச சபைகளில் பல மலையக உறுப்பினர்கள் குறிப்பிட்ட பிரதேச சபைகளுக்குத் தெரிவாகினர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கையில் தோட்டப்பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள பிரதேச சபையினது நிதி வழங்கப்படவில்லை. மாறாக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் தொண்டமான் அவர்களது தொழிற்சங்கத்தை சாராதவர்களுக்கு அவரது அமைச்சின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கவில்லை. இதேவேளை முதன் முறையாக பிரதேசசபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு இப்பிரச்சினை தொடர்பில் புரிதல் இருக்கவில்லை. மறுபுறம் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இச்சட்ட சிக்கல் தொடர்பில் புரிதல் இருக்கவும் இல்லை. அதனால் இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் எவ்வித கருத்தினையும் முன்வைக்கவில்லை.

இதேவேளை பிரதேசசபை தேர்தலில் மலையக தோட்ட மக்களது பல்லாயிரக்கணக்கான வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. பிரதேசசபைத் தேர்தலின்போது எவ்வாறு வாக்களிப்பது பற்றிய தெளிவு மலையக தோட்டவாழ் மக்கள் மத்தியில் போதிய அளவு தெளிவு இருக்கவில்லை. இதனைக் கருத்திற்




தோட்டக் குடியிறுப்புக்களை பிரதேசசபை அதிகாரத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற தொணிப்பொருளில் அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகளுடனான கலந்துரையாடல்

கொண்டு கண்டி, சமூக அபிவிருத்தி நிறுவகம் மலையக தோட்ட மக்கள் மத்தியில் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது பற்றிய விழிப்பூட்டலை 1993 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டது.

இவ்விழிப்பூட்டலுக்கான தயாரிப்பு வேலைகளை மேற்கொள்ளும் போது பிரதேச சபைக்குள்ள அதிகாரங்களைத் தெரிந்துக் கொள்வதற்காக சிங்கள மொழியில் உள்ள பிரதேசசபைத் சட்டத்தை நான் வாசிக்கலானேன். அவ்வாறு வாசித்த வேளை மத்திய மாகாணசபையின் முதல்வர் கூறிய கூற்று சரியென்பதனை அறியும் வாய்ப்பு கிடைத்தது.

பிரதேசசபை சட்டத்தின் பிரிவு 33 இல் தோட்டப் பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை பிரதேச சபையோ அல்லது அதன் உறுப்பினர் ஒருவரோ மேற்கொள்ள வேண்டுமாயின், வெறுமனே கிராமங்களில் மேற்கொள்வது போல் மேற்கொள்ள முடியாதவாறு சில சட்ட வரையறைகளை உள்ளடக்கியுள்ளது. அதன்படி தோட்டப்புறங்களில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள விரும்பின் முதலில் பிரதேசசபை உறுப்பினர் குறிப்பிட்ட பணி தொடர்பில் பிரேரணை ஒன்றினை சபையில் சமர்ப்பித்து அதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் சபை அது தொடர்பில் தோட்ட முகாமையாளரின் அனுமதியைப் பெற வேண்டும்.

குறிப்பிட்ட முகாமைத்துவத்தின் அல்லது உரிமையாளரின் அனுமதியைப் பெறுவதுடன் குறிப்பிட்ட முகாமைத்துவம் அல்லது உரிமையாளர் அக்குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள பண ரீதியாகவும் உதவி செய்ய வேண்டும். தோட்ட முகாமைத்துவத்தின் அல்லது உரிமையாளரின் அனுமதி கிடைக்காவிடின் அப்பணியை மேற்கொள்ள முடியாது. இதனை அடிப்படையாக வைத்தே மத்திய மாகாணசபை முதல்வர் மாகாணசபை உறுப்பினர்களுக்கு நிதி வழங்குவதற்கான அதிகாரத்தினை கொண்டில்லை என்று கூறியுள்ளார் என்பதனைப் புரிந்துக்கொள்ளும் வாய்ப்பு கிட்டியது.




மலையக சமூக சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு ஹோட்டல் ரேணுகாவில் நடாத்தப்பட்ட செயலமர்வு

மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி மாகாணசபைக்கு பிரதேசசபையை கண்காணிக்கும் அதிகாரமும் அதேவேளை பிரதேசசபையொன்று சட்டத்திற்கு முரணாக செயற்படின் அதனை கலைத்து விடும் அதிகாரமும் கொண்டுள்ளது. ஆனால் பிரதேசசபை கொண்டிருக்கும் அதிகாரத்தை இரத்து செய்யவோ அல்லது குறைக்கவோ மாகாணசபைக்கு அதிகாரமில்லை. இதன்படி பிரதேசசபை கொண்டிருக்கும் உரிமைகளை இல்லாதொழிக்காது அதற்கு அமைவாகவே மாகாண சபை செயற்படல் வேண்டும்.

பிரதேச சபையின் உறுப்புரை 33 இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "பிரதேச சபையானது அதன் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு தோட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தோட்டங்கள் அல்லது கைத்தொழிற் பொறுப்பு முயற்சிகள் எவற்றினது சொந்தக்காரர்களின் அல்லது சொந்தக்காரர்களின் வேண்டுகோளின் பேரில். அத்தகைய ஓர் இடப்பகுதியில் வீதியொன்றை நிர்மாணித்தல் அல்லது பேணுதல் பொதுமக்களின் நலனை வேறு வகையில் நியாயமானதாக்காதென பிரதேசசபை அபிப்பிராயம்படும் ஏதேனும் விடயத்தில்.




தொழிற்சங்க தலைவர்களுக்கு
கண்டியில் நடாத்தப்பட்ட செயலமர்வு

பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறாக அத்தகைய நிர்மாணத்தின் அல்லது பேணுகையில் செலவுகள் தொடர்பாக அத்தகைய உதவுத் தொகையைக் கொடுப்பனவு செய்வதற்கு அமைவாகவும் தோதான ஒரு சாதனத்தின் மூலம் அத்தகைய வீதி பகிரங்க விதியொன்றாக அமைக்கப்பட்டு பிரதேசசபைக்கு உரித்தாக்கப்படும் என்ற நிபந்தனைக்கமைவாகவும். கேள்விக்குட்பட்ட தோட்டத்தில் அல்லது தோட்டங்களின் அல்லது தொழிற்பொறுப்பு முயற்சியின் அல்லது முயற்சிகளின் சேவைக்கான வீதியொன்றை நிர்மாணிப்பதற்காக அல்லது பேணுவதற்காக, அத்தகைய சொந்தக்காரருடன் அல்லது சொந்தக்காரர்களுடன் ஒப்பந்தத்தை செய்யலாம். அத்துடன் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட அத்தகைய உதவு தொகைகள் யாவும் நன்மையடையும் காணிகளின் மீது சுமத்தப்படும் விசேட வீதவரிகளாகக் கருதப்பட வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் சுமத்தப்படும் வீதவரியொன்றைப் போன்று அதேமுறையில் அறிவிடப்பற்பாலதாகவும் வேண்டும். அத்துடன் வீத வரிகள் தொடர்பிலான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் யாவும் அது தொடர்பில் ஏற்புடையனலாதல் வேண்டும்."

இதேவேளை பிரதேசசபை சட்டத்தின் 19 வது பிரிவின் உபபிரிவில் கீழ் பின்வருமாறு குறிடப்பட்டுள்ளது. பிரதேசசபை நிதியத்தின் எப்பாகத்திலேனும் கிராமியப் பெண்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியிலும் சமூக அபிவிருத்திச் திட்டங்களிலும் கிராம அபிவிருத்திக் கருத்திட்டங்களும் கிராமோதய சபைகளுக்கும் கிராமோதய சபைகளில் பிரதிநிதித்துவம் வகிக்கப்படுவதற்குத் தகைமையுள்ள கிராம அபிவிருத்தி ஒழுங்கமைப்புக்களுக்கும் மானியக் கொடைகளைச் செய்வதிலும் செலவிடுதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி பிரதேசசபையோ அல்லது மாகாணசபையோ சட்டத்தின்படி தோட்டங்களிலோ அல்லது தோட்ட குடியிறுப்புக்களில் சுதந்திரமாக அபிவிருத்தியை மேற்கொள்ள முடியாது. அதேபோல் தோட்டங்களில் வாழும் பெண்களின் அபிவிருத்திக்கு அல்லது தோட்டப்புறங்களில் காணப்படும் அபிவிருத்தி மன்றங்களுக்கு அபிவிருத்திக்கென நிதி வழங்கிட முடியாது. மேலும் பிரதேசசபையின் சேவைகளை யார் பெறுவதற்கு உரித்துடையர் என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளது. உரித்துடையோர் என்பதை விளக்குகையில் இதற்கு முன்னர் காணப்பட்ட கிராம சபை கட்டளைச் சட்டத்திற் குறிப்பிட்ட பிரிவினரே பிரதேசசபையின் பயனை அனுபவிக்க உரித்துடையோர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி. 1924 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இலக்க 9 கிராமசபை திருத்தச் சட்டத்தின்படி இந்திய தோட்டத் தொழிலாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளோர் மற்றும்




சிவில் சமூக உறுப்பினர்களுக்கு பதுளையில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல்

அவரது உறவுப் பெண்கள் அல்லது பிள்ளை அல்லது எவரேனும் வயோதிபர் அல்லது வலது குறைந்த உறவினர் இச்சட்டத்தின் கீழ் நன்மைப் பெற உரித்துடையோர் இல்லையென குறிப்பிடப்பட்டுள்ளது இதன்படி பிரதேசசபையினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் அபிவிருத்திகளை பெற பெருத்தோட்ட வாழ் மக்கள் உரித்துடையவரல்ல என்பது சட்ட ரீதியாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனை காரணமாகக் கொண்டே முதலாவது மத்திய மாகாண முதலமைச்சரும் அதன் பின்னரும் உள்ளுராட்சி ஆணையாளரும் தோட்ட குடியிறுப்பு பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள மாகாண மற்றும் பிரதேசசபைக்கு அதிகாரம் இல்லையெனக் கூறியுள்ளனர் என்பதை என்னால் அடையாளம் காண முடிந்தது.

மாகாணசபை மற்றும் பிரதேசபையின் சட்டங்களை ஆய்ந்தறிந்தப் பின்னர் மலையக மக்கள் பிரேதசபைகளின் ஆட்சியைக் கைப்பற்றினாலும் தோட்டப்புற வாழ் மக்களுக்கு அச்சபையின் நிதியைக் கொண்டு எவ்வித அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ள முடியாது. எனவே பலம் வாய்ந்த பிரதேசபையின் சேவைகளை மலையக தோட்ட வாழ் மக்கள் அனுபவிக்க முடியாது. மாறாக அவர்கள் வெறுமனே வாக்களிக்கும் இயந்திரங்களாகவே இருப்பர்.

ஆகையால் இவ்வடிப்படை உரிமை மறுப்பு 33 பிரிவினை மாற்றுவது இன்றியமையாதது எனும் பிரச்சாரத்தை 1994 முதல் ஆரம்பித்தேன். இப்பரப்புரையை விரிவுப்படுத்தும் வகையில் முதலாவது பொது கலந்துரையாடலை 1994 ஆண்டு பதுளை ஊவா தொழிலாளர் உதவி நிலைய தலைவர் ஏ.கே.வேலவன் தலைமையில் துங்கிந்த போல்ஸ் ஓட்டலில் நடாத்தினேன். இக்கூட்டத்தில் ஊவா மாகாணசபைக்குட்பட்ட பிரதேசசபை உறுப்பினர் சிலர் உட்பட பதுளை மாவட்டத்தின் சிவில் செயற்பாட்டாளர் பலர் கலந்துக் கொண்டனர்.சிவில் சமூக உறுப்பினர்களுக்கு பதுளையில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டல் கூட்டத்தின்போது பிரதேசபை பிரிவு 33 வினை நீக்காவிட்டால் அல்லது அதற்கு திருத்தம் ஒன்றை கொண்டுவராவிட்டால் தோட்ட வாழ் மலையக மக்கள் பிரதேசபை வழங்கும் அபிவிருத்திகளைப் பெற முடியாத வெறுமனே வாக்களிக்கும் இயந்திரமாகவே மலையக தோட்ட மக்கள் இருப்பர் எனக் கூறினேன்.

மேலும் மலையக தோட்டப் புறங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிற்சிறு வேலைத்திட்டங்கள் அனைத்தும் பிரதேசசபை நிதியைக் கொண்டு செயற்படுத்தப்படுவதில்லை. மாறாக தோட்ட உட்கட்டமைச்சு மற்றும் மாகாணசபை வழங்கும் நிதியினைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூறினேன். எனவே பிரதேச சபைக்கு வாக்களித்த தோட்ட மக்களுக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஆகையால் அவர்கள் நாட்டின் முழுமையான பிரஜைகள் இல்லை எனக் கூறினேன். இதன் பின்னர் வீரகேசரி பத்திரிகையில் இது தொடர்பாக கட்டுரை ஒன்றினை எழுதினேன். இக்கூற்று மலையக அரசியல்வாதிகளின் கவனத்தை எட்டியதுடன், சில அரசியல்வாதிகள் பகிரங்கமாக என்னை விமர்சிக்கலாயினர். இல்லாத பிரச்சினை ஒன்றைக் கிளப்புவதாகக் குற்றம் சாட்டினர். இப்பொழுது நாங்கள் பிரதேசபை உறுப்பினர் ஊடக மேற்கொள்ளும் அபிவிருத்தி திரு.

முத்துலிங்கத்தின் கண்களுக்கு தென்படவில்லையா? என சிலர் பகிரங்க மேடைகளில் கேள்வி எழுப்பினர்.

எனினும் எனது நிலைப்பாட்டிலிருந்து தளராது கண்டி, சமூக அபிவிருத்தி நிறுவக உதவியுடன் எழுத்து ரீதியாகவும் கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகள் மூலமும் பரப்புரையை மேற்கொண்டேன். இவ்வாறு நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்கு மலையக அரசியல்வாதிகள், அறிவுஜீவிகள், சிவில் அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரை அழைத்தோம். கண்டி, அட்டன், பதுளை, கொழும்பு போன்ற பிரதேசங்களில் இவ்வாறான கலந்துரையாடல்களை நடாத்தினோம். கூட்டத்திற்கு வருகை தரும் அனைவரும் இவ்வுரிமை மறுப்பினை அறிந்துக் கொண்டதும் மாற்ற வேண்டும் எனக் கூறினர். ஆனால் இதனை மாற்றுவதற்கான முயற்சியில் எந்தவொரு அரசியல் அமைப்புகளோ சிவில் அமைப்புகளோ ஈடுபடவில்லை. பிரதேசபை உறுப்பினர்கள் தத்தமது கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வழங்கும் நிதியினைக் கொண்டு சிற்சில அபிவிருத்தி வேலைகளை தோட்டப்பகுதியில் மேற்கொண்டு வந்தமையினால் நான் கூறுபவைகளை அரசியல்வாதிகளோ அல்லது அமைப்புகளோ பெரிதாகக் கவனத்திற் கொள்ளவில்லை. இப்பின்புலத்துடன் இதன் பின்னர் நடந்தேறிய அனைத்து பிரதேசசபை தேர்தல்களின் போதும் பொதுத் தேர்தல்களின் போதும் இது தொடர்பில் கவனயீர்ப்பு கூட்டங்களை மேற்கொண்டோம்.

இந்நிலையில் 2006 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடந்தது. இத்தேர்தலின் போதும் வழமைப் போல் அரசியற்கட்சிகள் மற்றும் சுயயேச்சைக் குழுக்கள் போட்டியிட்டன. இவ்வேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கத்தில் இருந்து வெளியேறி தனிக்கட்சி அமைத்துக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் தமது தலைமையிலான இலங்கை ஜனநாயக ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் உடபலாத்த பிரதேசபைக்கான தேர்தலில் தம் உறுப்பினர்களை போட்டியிடச் செய்தார். அவர்களில் புஸ்ஸல்லாவைச் சார்ந்த தையலியலாளர் ராஜாராம் அவர்களும் ஒரு வேட்பாளராக போட்டியிடலானார். திரு.ராஜாராம் நாங்கள் நடாத்திய பிரதேசசபை தொடர்பான கலந்துரையாடல்களில் கலந்துக் கொண்டவராவார். இத்தேர்தலில் சிங்களக் கட்சிகளைச் சார்ந்தோர் போட்டியிட்ட போதிலும் தேர்தல் விண்ணப்பத்தை முறைப்படி சமர்ப்பிக்காமையினால் போட்டியிடும் வாய்ப்பை சிலக் கட்சிகள் இழந்தன. இதனால் முழுமையாக தமிழ் உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை ஜனநாயக ஐக்கிய காங்கிரஸ் உடபலாத்த பிரதேசசபையின் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு கிட்டியது.

வெற்றி பெற்ற தமிழ் உறுப்பினர்கள் திரு.பெருமாள் என்பவரை பிரதேசபையின் தலைவராக தெரிவு செய்தனர். உடபலாத்த பிரதேசசபையின் ஆட்சி பொறுப்பினை ஏற்று முதல் அமர்வினை திரு. பெருமாள் நடாத்துகையில் பிரதேசசபையின் செயலாளர் பிரதேச சபையின் அதிகாரம் மற்றும் உறுப்பினர்களின் உரிமைகளைப் பற்றி விளக்குகையில் பிரதேசசபை நிதியினைக் கொண்டு தோட்ட குடியிறுப்புகளில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள முடியாது என்று கூறியுள்ளார். மேலும் அவ்வாறு மேற்கொள்ளின் தோட்டத்துரைமாரின் அனுமதியையும் நிதியுதவியையும் பெற வேண்டும் எனக் கூறியுள்ளார். ஆனால் வெற்றி பெற்றோர் பிரச்சினையின்றி கிராமங்களில் பிரதேசசபையின் நிதியினைக் கொண்டு அபவிருத்தி வேளைகளை மேற்கொள்ளலாம் எனக் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தின் பின்னர் பிரதேசசபை உறுப்பினர் ராஜாராம் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு விடயத்தைக் கூறியதுடன், தமிழ் பிரதேசபை உறுப்பினர்களுக்கு பிரதேசபை பற்றிய தெளிவினை ஊட்டும் வகையில் செயலமர்வு ஒன்றை நடாத்தும்படி கோரினார். வெற்றி பெற்ற தமிழ் உறுப்பினர்களுக்கு 2006 ஆம் இரட்டப்பாதை எனும் இடத்தில் இருக்கும் தேயிலைத்




தோட்டக் குடியிறுப்புக்களை பிரதேசசபையின் அதிகாரத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட கையொப்பம் திரட்டல், 2011

தொழிலாளர் அருங்காட்சியக கேட்போர் கூடத்தில் செயலமர்வொன்றினை நடாத்தினோம்.

இச்செயலமர்விற்கு உடபலாத்த பிரதேசபையின் தலைவர் பெருமாள் உட்பட ஓரிருவரைத் தவிர அனைத்து தமிழ் உறுப்பினர்களும் பங்கு கொண்டனர். இச்செயலமர்வின்போது பிரதேசசபையின் சட்டங்களைப் பற்றி விளக்கியதுடன், பிரதேசபை செயலாளர் தந்த விளக்கம் சரிதான் எனக் கூறினேன். அப்போது பிரதேச சபையின் தலைவர் எமது உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு வேறு ஏதேனும் வழி உண்டா எனக் கேட்டார். நீங்கள் சபைத் தலைவர் என்ற ரீதியில் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு பிரச்சினையை விளக்கப்படுத்தி உறுப்பினர்களுக்கு எவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்வது என அறியத்தரும்படி கடிதம் எழுதுங்கள் எனக் கூறினேன். அவர் என்ன பதில் தருகின்றாரோ அதனை வைத்து மேற்படி நடவடிக்கையை மேற்கொள்ளலாம் எனக் கூறினேன். பின்னர் நகல் கடிதத்தை நானே எழுதிக் கொடுத்தேன். அதன்படி சபைத் தலைவர் 2011 திரு.பெருமாள் அவர்களும் 2007 மார்ச் 30 ஆம் திகதி கடிதம் ஒன்றினை மத்திய மாகாணா உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுதி அனுப்பியுள்ளார். அதற்கு 2007 ஏப்ரல் 4 ஆம் திகதி பதில் கடிதம் ஒன்றை அனுப்பிய ஆணையாளர். தோட்டத்துறை பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பிரதேசசபை சட்டத்திற்கு முரணாகாத வகையில் நிதி வழங்கும்படி எழுதியுள்ளார்.

அக்கடிதம் கிடைத்தவுடன் திரு.பெருமாள் தொடர்பு கொண்டு கடித உள்ளடகத்தைக் கூறினார். அப்போது நான் அவர் பிரதேசசபை சட்டத்திற்கு முரண்படாத வகையிலேயே நிதி வழங்கும்படி கூறியுள்ளார். அதன்படி பார்க்கின் தோட்டங்களில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள முடியாது. எனினும் அக்கடிதத்தை ஒரு ஆதாராமாக வைத்துக் கொண்டு குறிப்பிட்ட வேலைத்திட்டம் ஒவ்வொன்று தொடர்பில் சபையில தீர்மானம் எடுத்து உறுப்பினர்களுக்கு நிதி வழங்குங்கள் என்று திரு.பெருமாள் அவர்களிடம் கூறினேன். அதன்படி பிரதேசபைத் தலைவர் தமிழ் உறுப்பினர்களுக்கு தலா இரண்டு லட்சம் ரூபா நிதி வழங்கலானார். அவ்வாறு வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு தமிழ் உறுப்பினர்கள் சில அபிவிருத்தி வேலைகளை நிவ்பீகொக், மெல்போர்ட், செல்வகந்த முதலிய தோட்டங்களில் மேற்கொண்டனர்.

இவ்வாறு செயற்படுகையில் உடபலாத்த பிரதேசபை சட்டத்திற்கு முரணாக செயற்பட்டுள்ளது எனக் கூறி மத்திய மாகாணசபையின் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் திகதி விசேட அரசாங்க வர்த்தமானி அறிக்கை ஒன்றை வெளியிட்டதன் மூலம் உடபலாத்த பிரதேசபையை கலைத்துவிட்டார். கலைப்பதற்கான காரணிகளை குறிப்பிடுகையில் பிரதேசபையின் பிரிவு 33க்கு முரணாக

1. நிவ் பீ கொக் கோயில் பாதைக்கு கொன்கீரீட் போட்டமை
2. செல்வகந்த கோயில் பாதையை புதுப்பித்தமை
3. நிவ் பீ கொக் தோட்டத்தில் தண்ணீர் தொட்டியை கட்டியமை
4. நிவ் பீ கொக் தோட்டத்தில் நீர் தாங்கி ஒன்றை நிறுவியமை
5. நிவ் பீ கொக் டிவிசனின் 21 வது லயன் காம்பிராவுக்கு செல்லும் பாதையை புதுப்பித்தமை
6. மெல்போர்ட் தோட்டத்தில் படி கட்டியமை

என்பனவும் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும் இவ்வேலைத்திட்டத்தை மேற்கொண்ட தமிழ் உறுப்பினர்களுக்கு எதிராகவும் விசாரணை செய்ய ஆணையிடப்பட்டதுடன் உறுப்பினர்களுக்கு தனித்தனியாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இக்கடிதம் கிடைத்தவுடன் தலைவர் உட்பட சில உறுப்பினர்கள் என்னை தொடர்பு கொண்டனர். நான் சிரேஸ்ட வழக்கறிஞரான லால் விஜேநாயக்கவை சந்திக்கும்படி கூறினேன். ஆயினும் அவரவர் வழக்கறிஞர்களை சந்தித்து பதில் கடிதம் எழுதியிருந்தனர். அதேவேளை நான் கூறி வந்த பிரதேசசபையின் 33வது பிரிவு தொடர்பான உரிமைப் பிரச்சினையை நடைமுறையில் காட்டுவதற்கான வாய்ப்பு கிடைத்து விட்டது என மகிழ்வடைந்த நான் இக்கலைப்பு தொடர்பாக கட்டுரையொன்றினை வீரகேசரியில் எழுதினேன்.



*தோட்டக் குடியிறுப்புக்களை பிரதேசசபையின் அதிகாரத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி திரட்டப்பட்ட 50,000 கையொப்பம் மற்றும் மகஜர் நுவரெலிய மாவட்ட செயலாளருக்கு கையளிக்கப்பட்டது.*

இக்காலக்கட்டத்தில் அரசார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான கெயார் நிறுவனம் எயார் ஏசியா என்ற தொலை காட்சியில் மக்கள் அரங்கம் என்ற நிகழ்வொன்றினை நடாத்தி வந்ததுடன், மக்கள் முகம் கொடுக்கும் அடிப்படை பிரச்சினைகளை கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணர்ந்தது. அக்கலந்துரையாடல் தொடரினை மும்மொழிகளிலும் நடாத்தி வந்தது. அந்நிகழ்வுகளில் ஒன்றினை மலையக மக்களது அபிவிருத்தி தொடர்பாக நடாத்த திட்டமிட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்த கெயார் நிறுவன அதிகாரியான ஆனந்த அலககோன் அவர்கள் என்னை அக்கலந்துரையாடல்களில் கலந்துக்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். நான் சிங்களம் மற்றும் ஆங்கில நிகழ்வுகளில் கலந்துக்கொள்கிறேன் எனக் கூறினேன். அவ்வகையில் சிங்கள நிகழ்வில் பங்குகொள்ளுமாறு எனக்கு அழைப்பு விடுத்தார்.

மலையக மக்கள் பற்றிய இச்சிறப்பு நிகழ்விற்கு தேயிலைத் தோட்ட புரோகர் சங்கத்தின் தலைவர் திரு.அனில்குக், துரைமார் சங்க பிரதிநிதிகள் உட்பட இ.தொ.கா சார்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த திரு.ஆர்.யோகராஜன் அவர்களும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றிய திரு.ஆர்.யோகராஜன் தோட்டப்பகுதிகளில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்திகளை சுட்டிக்காட்டி பேசினார். அவரைத் தொடர்ந்து பலர் தோட்டத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திகளைப் பற்றி பேசினர். அவர்களைத் தொடர்ந்து நான் உரையாற்றுகையில் தோட்டத்துறையில் என்னதான் அபிவிருத்திகளை மேற்கொண்டாலும் மலையக தோட்ட மக்கள் நாட்டின் ஏனைய பிரிஜைகள் போல் அபிவிருத்தி திட்டங்களை அனுபவிக்க முடியாது உள்ளனர். அதேபோல் அவர்களால் தெரிவு செய்யப்படும் பிரதேசசபை உறுப்பினர்கள் பிரதேசசபை நிதியினைக் கொண்டு தோட்டங்களில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியாது என்றேன். மேலும் தோட்ட வாழ் மக்கள் வெறும் வாக்களிக்கும் இயந்திரங்களாகவே வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறினர். இக்கருத்திற்கு திரு.யோகராஜன் உள்ளிட்ட பலர் மறுப்பு தெரிவித்து தாங்கள் அபிவிருத்தி திட்டங்களை பிரச்சினையின்றி மேற்கொண்டு வருகின்றோம் எனக் கூறினர். அப்போது நான் உடபலாத்த பிரதேசசபை கலைக்கப்பட்ட வர்த்தமானி

அறிக்கையையும் கலைக்கப்பட்ட காரணிகளில் ஒன்றாக பிரதேசசபை சட்டத்தின் பிரிவு 33 இன் பகுதிக்கு முரணாக தோட்டங்களின் பிரதேசசபை நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை சுட்டிக்காட்டி மத்திய மாகாண முதலமைச்சர் சிங்களத்தில் அனுப்பியிருந்த கடிதத்தை வாசித்துக்காட்டி சபையோருக்கு விளக்கிக் கூறினேன். கலந்துக் கொண்ட அனைவரும் ஆச்சரியத்துடன் கடிதத்தைப் பார்த்து மௌனத்தை கடைப்பிடித்தனர்.

கலந்துரையாடல் முடிந்தப் பின்பு வெளியில் வந்த திரு.யோகராஜன் அவர்கள் என்னை பார்த்து அண்ணே நீங்க சொன்னதெல்லாம் உண்மைதான் இப்போது நான் இவ்வுரிமை மறுப்பினை அறிந்துக் கொண்டேன். நான் அரசாங்கத்தில் இருந்துக் கொண்டு உங்களுக்கு சார்பாக பேச முடியாத நிலையில் இருந்தேன். இருப்பினும் நாம் இதற்கு எதிராக திருத்தம் ஒன்றைக் கொண்டுவர பணியாற்றுவோம் என்றார்.

இதன் பின்னர் கொழும்பு ரேணுக்காக ஓட்டலில் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கலந்துரையாடல் ஒன்றினை ஒழுங்கு செய்தேன். இக்கலந்துரையாடலுக்கு அனைத்து மலையக அறிவுஜீவிகளுக்கும் தொழிற் சங்கவாதிகளுக்கும், அரசியல் தலைமைகளுக்கும் அழைப்பு விடுத்தேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் உட்பட மலையகத்தின் அனைத்து பிரதான தொழிற்சங்கத் தலைவர்களும் கல்விசார் அறிவுஜீவிகளும் மற்றும் உடபலாத்த பிரதேசசபை உறுப்பினர்களும் பங்குபற்றினர். இக்கலந்துரையாடலில் 1994 ஆம் ஆண்டு முதல் பிரதேசசபையின் 33 பிரிவு பற்றி நான் கூறி வந்த உரிமை மறுப்பு இன்று யதார்த்தமாகி உள்ளதை நினைவுப் படுத்தியதுடன் உடனடியாக சட்டத்திருத்தமொன்றினைக் கொண்டு வருவதற்கு அனைத்து கட்சிகளும் பாராளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தேன்.

அவ்வேளை கலந்துரையாடலில் பங்குபற்றிய திரு.பி.பி.தேவராஜ் அவர்கள் தற்போது பாராளுமன்றத்தில் அமைச்சுப் பதவிகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் (இ.தோ.கா) பிரதிநிதிகள் இருப்பதனால் அவர்களுக்கு இதனை விளங்கப்படுத்தி சட்ட திருத்தமொன்றினை கொண்டுவர முயற்சி செய்யுங்கள் எனக் கூறினார். இக்கலந்துரையாடலில் இ.தோ.கா வைச் சார்ந்த திரு.எம்.மாரிமுத்து அவர்களும் பங்குபற்றியிருந்தார். இக்கருத்தினை அனைவரும் வலியுறுத்தியமையினால் அக்கலந்துரையாடலுக்கு அடுத்த நாள் பிரதி அமைச்சராக இருந்த திரு.முத்துசிவலிங்கத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கினேன். பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் ஒரு நகல் சட்டத்தை தயாரித்து தந்தால் தான் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டத்திருத்தத்தை கொண்டு வருவதாகக் கூறினார். மேலும் அவர்களால் பாராளுமன்ற குழுவொன்றிற்கு நியமிக்கப்பட்டிருந்த வழக்கறிஞர் கருணாகரன் அவர்களை சந்தித்து இது பற்றி கூறி திருத்தச் சட்டத்தை தயார் செய்து கொண்டு வரும்படி கூறினார். ஓரிரு தினங்களின் பின்னர் திரு.கருணாகரன் அவர்களை அட்டனில் சந்தித்து விடயத்தினை எடுத்துக் கூறினேன். எனது விளக்கத்திற்கு செவிமடுத்த அவர் தான் சட்டம் இயற்றும் துறையில் நிபுணத்துவம் பெறவில்லை அதனால் சட்டம் இயற்றும் துறையில் ஈடுபடும் வக்கீல் ஒருவரை சந்திக்கும்படி கூறிவிட்டார். இதன் பின்னர் சிரேஸ்ட சட்டத்தரணி லால் விஜயநாயக்க அவர்களை சந்தித்து விடயத்தைக் கூறினேன். அவர் தோட்ட மக்கள் நாட்டின் பிரசைகள் அதனால் அவர்களுக்கு பிரதேசசபையின் அபிவிருத்தி திட்டங்களை அனுபவிக்க இடமுண்டு எனக்கூறி அனைத்து ஆதாரங்களையும் எடுத்து வரும்படி கூறினார். அதன் பின்னர் பலமுறை முயன்றும் அவரது வேலைப்பளு காரணமாக அவரை சந்திக்க முடியாமற் போய்விட்டது.

இதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு பிரதேச சபையின் 33 பிரிவு பற்றி மக்கள் மத்தியில் அறிவூட்டி அப்பிரிவினை நீக்கும்படி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் துண்டு பிரசுரம்,

போஸ்டர் என்பவற்றுடன் 50 ஆயிரம் கையொப்பத்தை திரட்டும் செயற்பாட்டை பெருந்தோட்டத்துறை சமூக மாமன்ற அங்கத்துவ அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சமூக மன்றங்களுடன் இணைந்து மேற்கொண்டோம். அவ்வாறு பெற்ற கையொப்பங்களை கண்டி, நுவரெலிய மற்றும் பதுளை அரசாங்க அதிபர்களுடாக உள்ளுராட்சி அமைச்சிற்கு அனுப்பி வைத்தோம். இதேவேளை மக்கள் மத்தியில் தோட்டங்களை உள்ளுராட்சி சபையின் கீழ் கொண்டு வருவதன் அவசியம் பற்றி விழிப்பூட்டல் செய்யும் வகையில் மலையக நகரங்கள் மற்றும் தோட்டங்களில் வீதி நாடங்கங்களை அரங்கேற்றினோம்.



கொழும்பு ஜானகி ஹோட்டலில் 2012, மே மாதம் 7 ஆம் திகதி நடாத்தப்பட்ட கலந்துரையாடல். முன்வரிசையில் அருட்தந்தை பெணி, திரு.மைக்கல் ஜோக்கிம், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.யோகராஜன், ஆர். இராதாகிருஷ்ணன் பின் வரிசையில் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம், திரு.திலகராஜ், கலாநிதி. எஸ்.சந்திரபோஸ்

இவற்றுடன் 2010 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி கொழும்பு ரேணுகா ஓட்டலில் அனைத்து பிரதான தொழிற்சங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் அறிவுஜீகளை அழைத்து பிரதேச சபையின் 33வது பிரிவினை உடனடியாக நீக்குவதையும் சொந்தமாக வீடுகட்ட காணி கோருவதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தினோம். இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் மற்றும் பழனி திகாம்பரம் உள்ளிட்ட மலையகத்தின் தொழிற்சங்க தலைவர்கள் கலந்துக் கொண்டனர். இக்கூட்டத்தில் கலந்துக்கொண்ட திரு.ஆர்.யோகராஜன் தான் உள்ளுராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சின் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிப்பதாகக் கூறியதுடன் அக்குழுவில் இப்பிரச்சினையை முன்வைப்பதாகக் கூறினார்.

இக்கூட்டத்தின் பின்னர் கூட்டத்தில் கலந்துக்கொண்ட அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் பெயரை உள்ளடக்கி இப்பிரச்சினையை விளக்கி ஜனாபதி மகிந்த ராஜபக்சவிற்கு கடிதம் ஒன்றினை அனுப்பினேன். அதே கடிதத்தை அமைச்சர்களான அதாவுல்லா, தினேஸ் குணவர்தன மற்றும் வாசுதேவ நாணாயக்காரவிற்கு அனுப்பி வைத்தேன். இதேவேளை பத்திரிகை மாநாடு ஒன்றையும் நடாத்தினோம்.

இப்பின்புலத்தில் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 முதல் 19 ஆம் திகதி வரை நடைப்பெற்ற ஐ.நா.சபையின் பொருளாதார, சமூக, கலாசார, அமர்விற்கு செல்லும் வாய்ப்பு கிட்டியது.

இவ்வமர்வில் பெருந்தோட்ட சமூக மாமன்றம் சார்பாக நான் உட்பட வண.பிதா.பெனி, திரு.எஸ். முருகையா மற்றும் திருமதி.விஜயலச்சுமி முதலியோர் பங்குபற்றியதுடன் பிரதேசபை பிரச்சினை உள்ளிட்ட மலையக மக்களது கல்வி, சமூக, கலாசார பிரச்சினைகளை முன்வைத்தோம்.

இவ்வமர்வில் அரசாங்கம் சார்பாக கலந்துக்கொண்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதி சொலிஸ்டர் ஜெனரல் இலங்கைக்குச் சென்றவுடன் பிரதேசசபை பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். ஆனால் நாடு திரும்பிய பின்னர் எவ்வித நடவடிக்கையும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளபடவில்லை.

இந்நிலையில் 2012 மார்ச் 14 ஆம் திகதி திரு.யோகராஜன் அவர்கள் பிரதேசசபை சட்டத்தின் பிரிவு 33 பற்றி உள்ளூராட்சி அமைச்சருக்கு கடிதம் ஒன்றினை எழுதி அதற்கு திருத்தம் கொண்டு வர வேண்டும் எனக் கோரியிருந்தார். அக்கடிதத்தின் நகலை எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அதேவேளை 2012 மே 23 ஆம் திகதி பாரளுமன்றத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் பற்றிய கலந்தாய்வு குழுக் கூட்டத்தில் இவ்விடயத்தை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கி, பிரச்சினையை முன்வைத்து திருத்தத் சட்டத்தின் தேவையை முன்வைத்துள்ளார்.

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான அக்கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக ஆராய குழுவொன்றை நியமித்து அதன் பின்னர் சட்ட திருத்தம் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்வதாக முடிவெடுக்கப்பட்டது. ஆனால் வழமைப்போல் ஒன்றும் நடைபெறவில்லை. இவ்வாறிருக்க 2010 ஆம் ஆண்டு ஜனாபதிக்கு அனுப்பிய கடிதத்தினை குறிப்பிட்டு அது தொடர்பாக ஆவண மேற்கொள்ளும்படி ஜனாதிபதி செயலாளரின் உதவி செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகளின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை எனக்கு அனுப்பியிருந்தார். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை.

இப்பின்புலத்தில் கெயார் நிறுவனத்தின் உதவியுடன் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவூட்டும் முயற்சியில் ஈடுபட்டோம். அன்றைய ஜனாதிபதி மகிந்த இராஜபக்சவின் தலைமையின் கீழ் இயங்கிய அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி அமைச்சராகவிருந்த அவரது சகோதரர் பெசில் இராஜபக்ச அவர்களுக்கு பிரச்சினையை எடுத்துக் கூறி தீர்வினைக் காணலாம் என முயன்றோம். அதன் முதற் கட்டமாக அவரது ஆலோசகராகப் பணியாற்றிய கொழும்பு பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் திரு.தம்ம திசாநாயக்க அவர்களை சந்தித்தோம். கெயார் நிறுவனத்தில் பணியாற்றிய திரு.விஜேகோன் அவர்களே இச்சந்திப்பினை ஒழுங்கு செய்தார்.

இச்சந்திப்பு கொழும்பிலுள்ள மாகாவலி அபிவிருத்தி அமைச்சகத்தில் நடந்தது. விடயத்தைப் புரிந்துக்கொண்ட திரு.தம்ம திசாநாயக்க முழுமையாக இவ்விடயத்தைப் பற்றி தெரிந்துக்கொள்ள ஒரு கலந்துரையாடல் செய்ய வேண்டும் என்றார். அதன் பின்னர் கெயார் நிறுவனத்தின் நாவலப்பிட்டிய பணிமனையில் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினோம். இக்கலந்துரையாடலை கெயார் நிறுவனத்தின் திரு.விஜயக்கோன் மற்றும் கெயாரின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.காதர் ஆகிய இருவரும் ஒழுங்கு செய்தனர். இக்கலந்துரையாடலின் போது தம்ம திசாநாயக்க அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய ஆவணம் ஒன்றை தயார்படுத்தி தந்தால் அதனை திரு.பெசிலிடம் கொடுத்து அதன் பின்னர் அவருடன் கலந்துரையாடல் ஒன்றினை ஏற்படுத்தி தருவதாகக் கூறினார். அதன்படி அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய கோப்பு ஒன்றினை கெயார் விஜேகோன் ஊடாக அனுப்பி வைத்தோம். ஆனால் திரு.தம்ம திசாநாயக்க திரு.பெசில் ராஜபக்சவுடனான சந்திப்பை ஏற்படுத்தித் தரவில்லை.

இப்பின்புலத்தில் மீண்டும். 2012 ஆம் ஆண்டு மே 7 ஆம் திகதி இவ்விடயம் தொடர்பில் ஜானகி ஹோட்டலில் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தினோம். இக்கலந்துரையாடலில் பிரதி அமைச்சராக இருந்த பழனி திகாம்பரம், பாரளுமன்ற உறுப்பினர் திரு.யோகராஜன், திரு. மனோகணேசன் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர். அக்கலந்துரையாடலின் போது திரு.பெசில் ராஜபக்சவிடம் இதனை எடுத்துக்கூறி சட்ட திருத்தமொன்றினை கொண்டுவரக்கூடிய வாய்ப்பு இருப்பதாக திரு. பழநி திகாம்பரம் கூறினார். எனினும் தனக்கு இதுபற்றி பெரிதாக ஒன்றும் தெரியாது ஆகையால் நான் அமைச்சர் திரு.பெசில் ராஜபக்ஸவுடன் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்கிறேன் அவரிடம் இதனை விளக்கமாக எடுத்துக் கூறுங்கள் எனக் கூறினார். இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜனும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகக் கூறினார். அப்போது நான் சிறந்த சட்டத்தரணி ஒருவரை சந்தித்து நாம் ஒரு சட்ட நகலை தயாரித்துக் கொள்வது அவசியம்

என்றேன். அப்போது திரு.யோகராஜன் நான் அரசியலமைப்பு சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்னவுடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு அறிவிக்கின்றேன் என்றார். அதற்கு முன் பிரதேசசபை சட்டம் பற்றி அறிக்கையொன்றை தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

அதன்படி திரு.யோகராஜன் மே 8 ஆம் திகதி தொடர்பு கொண்டு மே 11 ஆம் திகதி பின்நேரம் 5.00 மணிக்கு திரு.ஜயம்பதி விக்ரமரத்னவை அவரது வீட்டில் சந்திக்க வாய்ப்பளித்துள்ளார். ஆகையால் ஒரு அறிக்கையைத் தயாரித்துக் கொண்டு வரும்படி கூறினார். நானும் எங்களது பணிமனை உத்தியோகத்தர்களான செல்வி.கே.யோகேஸ்வரி, திரு.எஸ்.சந்தனம் சத்தியநாதனும் குறிப்பொன்றை தயாரித்துக்கொண்டு திரு. யோகராஜனுடன் திரு.ஜயம்பத்தியின் வீட்டிற்கு சென்றோம். திரு.யோகராஜன் விடயத்தை கூறினார். அதன் பின்னர் நான் தயாரித்த பத்திரத்தை வாசிக்க கொடுத்தேன். அதை வாசித்த திரு. ஜயம்பதி அப்படி சட்டத்தில் ஒரு சமூகத்தை ஓரம் கட்ட முடியாது. நீங்கள் சரியாக சட்டத்தை புரிந்துக் கொள்ளவில்லை. உடபலாத்த பிரதேசபையைக் கலைத்த போது உங்கள் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் பேசியிருக்க வேண்டும் என்றார். அப்போது நான் பேசி பயனில்லை. ஏனெனில் 1924இல் கொண்டுவரப்பட்ட கிராமசபை சட்டத்தின்படி தோட்ட மக்கள் ஓரங்கப்பட்டுள்ளனர் என்றேன். அதற்கு கோபமடைந்த அவர் சட்டத்தில் எங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றது காட்டுங்கள் என்றார்.

நான் தயாரித்த படிவத்தில் 1924 ஆம் ஆண்டு கிராம சபைத் திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி அது 1987 ஆம் ஆண்டு பிரதேசபை சட்டத்திற்கும் பொருந்தும் என்றேன். உடனே அவர் தம்மிடமிருந்த சட்ட புத்தகத்தை எடுத்த பார்த்த அவர் இது மிகவும் பிழையானது இவ்வளவு நாள் இதுபற்றி பேசாமல் இருந்ததே பெரும் தப்பு எனக் கூறியதுடன், நான் சட்ட வரைவினை உருவாக்குபவன் அல்ல. சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சார்ந்தவர்களே அதனைச் செய்வர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டவரைவு பிரிவில் திரு.செல்வகுமாரன் என்று ஒருவர் இருக்கிறார் அவரின் தொலைபேசி இலக்கத்தை தருகின்றேன் அவரிடம் சென்று நான் சொன்னதாக இதனைக் கூறுங்கள் அவர் உங்களுக்கு ஏற்ற வகையில் நகல் சட்டத்திருத்தத்தை தயார் செய்து தருவார் என அவரது தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தார்.

They also called for the amendment of the Pradeshiya Sabha Act No: 15 of 1987 enabling the Pradeshiya Sabhas to take over plantation sector settlements which were currently under estate companies. They also called for the setting up of several new Pradeshiya Sabhas and divisional secretariats for the estate areas to enable active development.

**DM QUOTE**

"One of the major impediments for the development of these persons is the Pradeshiya Sabha Act which had paved the way to put plantation settlements under the purview of estate companies

–P. Muthulingam

One of the participants of the joint lobby group, the Institute of Social Development (ISD) Director P. Muthulingam told a news conference that the demands would be put forward to all political parties at this election with the objective of getting some redress to plantation sector workers who have not been absorbed for national development. He said the trade union NGOs and social service organizations decided to form a joint lobby group, as estate sector workers had suffered a sad plight during the last six decades.

**FLASH BACK**



- Nov 2006: Estate workers launch strike calling for a daily wage of Rs 300.
- Dec 2006: Strike settles as workers settle for Rs 290.
- Sep 2009: Workers resume struggle for Rs 500 wage hike but settle for Rs 400.

© DM GraphicsDesk

He said, "One of the major impediments for the development of these persons is the Pradeshiya Sabha Act which had paved the way to put plantation settlements under the purview of estate companies. This had deprived the plantation settlements of the right for development."

Mr. Muthulingam recalled that the Uda Palatha Pradeshiya Sabha run by an independent group was suspended for developing estate settlements and for setting up of roads for such a settlement.

Former member of the suspended Uda Palatha Predehiya Sabha, R. Shanmugadeepa said the Sabha was suspended because it performed its duty towards those who elected it.

"We were elected members and our duty was to work for our electors and we were penalized for it," she added. She therefore stressed the need for wider powers for Pradeshiya Sabhas to deal with the issues faced by estate workers.

Some of the organizations that had come together to form the joint lobby were Plantation Sector Social Forum, Joint Plantation Trade Union Centre, Civil Forum, All Ceylon United Workers Congress, Workers Liberation Front, United Plantation Workers Union and Institute of Social Development in addition to the Nidahas Sevaka Sangamya.

The lobby group which stressed that the 'Mahinda Chinthanaya' had promised vital changes to the plantation sector to improve the lifestyle of the estate workers said they would handover a proposal for developing the sector to president Mahinda Rajapaksa shortly.

Daily Mirror 17/03/2010

# பிரதேச சபைகளினூடாக மேற்கொள்ளப்படும் சேவைகள் தோட்டப்புற மக்களுக்கு கிடைப்பதில்லை

**அம்பகமுவ நிருபர்**

பிரதேசசபை தேர்தலில் தோட்டப்புற மக்களும் வாக்களிக்கின்றனர்.ஆனால் பிரதேச சபையினூடாக மேற்கொள்ளப்படும் சேவைகள் மாத்திரம் அம் மக்களுக்கு கிடைப்பதில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் பெரும்பாலும் தோட்டப்புற மக்களின் வாக்குகளை பெற்றே வெற்றி பெறுகின்றனர்.ஆனால் அவர்கள் பிரதேச சபையினூடாக மேற்கொள்ளப்படும் சேவைகளை பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

குறிப்பாக அம்பகமுவ பிரதேச சபைக்கு உட்பட்ட சில சிறிய கடைகள் இன்னமும் பிரதேசசபைக்குள் உள்வாங்கப்படவில்லை. ஆனால் சில கட்டணங்கள் பிரதேச சபையினால் அறவிடப்படுகின்றது.இக் கட்டணம் எதற்காக என்பது தெரியவில்லை.லக்கம் கடைவீதி,டைசைட் சந்தி,மவுசாக்கலை சந்தி போன்ற பல சிறிய கடை வீதிகளும் பிரதேசசபைக்குள் உள்வாங்கப்படல் வேண்டும்.அதே சமயம் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து தோட்டப் புறங்களை கிராமப்புறங்கள் போன்று பிரதேச சபைக்கு உள்வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அதே வேளை கடந்த அம்பகமுவ பிரதேச சபை கூட்டத்தின் போது இவ்விடயம் குறித்து பிரதேச சபை உறுப்பினர் கே.சுரேஸ்குமார் பிரதேசசபை சட்டமூலத்தில் 33 ஆவது சரத்து மாற்றி அமைக்கப்பட்டு தோட்ட புறங்களுக்கும் இச் செயற்பாடுகள் முன்னெடுக்க வேண்டுமென வலியுறுத்தி பேசி இருந்தமையும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.அதே போன்று இவ்விடயத்தில் சகல அரசியல் தலைவர்களும் முன் நின்று செயற்பட்டால் இவ்விடயத்தில் வெற்றி காண முடியுமென தோட்ட பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தினக்குரல் 01/08/2011 P-15

# பிரதேசசபை சட்ட மாற்றத்தின் மூலமே தோட்டத்தொழிலாளருக்கு நன்மை

தினக்குரல் **யோகராஜன் எம்.பி. கூறுகிறார்**

**ரொஷான் நாகலிங்கம்** 01/04/2011

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சட்ட மூலத்தின் பிரதேசசபைகள் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படுவதன் மூலமே தோட்டப்புற மக்களுக்கு சேவையைப் பெற்றுக்கொடுக்க முடியுமென பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.கடந்த வருடம் இச்சட்ட மூலத்தை வாக்கெடுப்புக்கு விடுவதை அரசாங்கம் கைவிட்டிருந்த நிலையில் மீண்டும் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படவுள்ளது.1989 பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தோட்டப்புற பகுதிகளில் பிரதேச சபைகள் அபிவிருத்தி மேற்கொண்டால் அதன் செலவை தோட்ட நிர்வாகமே வழங்கவேண்டும்.

இதனையும் மீறி பிரதேசசபை அதிகாரிகளும் சபை உறுப்பினர்களும் அங்கு அபிவிருத்தி மேற்கொண்டால் சட்டப்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க முடியும்.இந்நிலையில் தோட்டப்புற மக்கள் வாக்களிக்க மறுக்கப்படாத அதே வேளை அவர்களுக்கான சேவையை பெற்றுக்கொடுக்க பிரதேச சபைகளால் முடியாது போகின்றது.எனவே,தோட்டப்புற மக்கள் வாக்களிக்கும் இயந்திரங்களாக மட்டுமன்றி அவர்களுக்கும் சேவையை பெற்றுக்கொடுக்க இச்சட்டத்தை மாற்றவேண்டும்.

## தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள மாகாண சபைக்கும் அதிகாரமில்லை

தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேசசபைகளுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பதனை வெளிக்கொணரும் வகையில் பிரதேசசபைகளுக்கான சட்ட உறுப்புரைகளையும் அதனோடு தொடர்புள்ள கிராமசபை கட்டளைச் சட்டத்தையும் பற்றி கடந்த வார கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். அத்துடன் அக்கட்டுரையில் மாகாண சபைக்கும் தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரமில்லை என்பதனை முதலாவது மத்திய மாகாணசபைகளின் முதலமைச்சர் கூறிய கூற்றினை மேற்கோள்காட்டியிருந்தேன். கட்டுரையின் நீட்சியைக் கருத்திற்கொண்டு தோட்டக் குடியிருப்புகள் தொடர்பாக மாகாணசபை கொண்டுள்ள அதிகாரத்தை விளக்கவில்லை. ஆகையால் இக்கட்டுரையில் மாகாணசபை தோட்டக் குடியிருப்புகளின் அபிவிருத்தி தொடர்பாக எவ்வாறான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது என்பதனைப் பற்றி விளக்க முயல்கின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேசசபை சட்டம் 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் பதினாறாம் திகதி அமுலாக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் நிர்வாக பணிகளை பன்முகப்படுத்தும் (Decentralized) நோக்கிலேயே பிரதேசசபைச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதற்கமைய

1979-1987 வரை நடைமுறையிலிருந்த அபிவிருத்தி சபை நீக்கப்பட்டு அதனிடத்தே பிரதேசசபை அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதேசசபை சட்டம் கொண்டுவரப்பட்ட காலக்கட்டத்தில் அதிகாரப் பகிர்வினை (Devolution) கோரி போராடிய வடக்கு கிழக்கு மக்களது போராட்டம் வலுப்பெற்றதுடன் சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக குறிப்பாக இந்தியாவின் அழுத்தம் காரணமாக இலங்கை அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிரும் நிலைக்குத்தள்ளப்பட்டது. இதனால் ராஜீவ்-ஜே.ஆர் உடன்படிக்கை 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் விளைவாக மாகாணங்களுக்கு அதிகாரத்தை பகிரும் வகையில் இலங்கை அரசாங்கம் அரசியலமைப்பிற்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தினைக் கொண்டு வந்தது. இப்பதின் மூன்றாவது திருத்தச் சட்டத்திற்கமைய இலக்கம் 43 ஐ கொண்ட மாகாண சபை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பதின்மூன்றாவது அரசியலமைப்பு சீர்திருத்தம் 1987 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதன்படி பிரதேசசபைச் சட்டம் அமுலுக்கு வந்த ஏழு மாதங்களுக்குப் பின்னரே மாகாணசபை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கமைய உள்ளூராட்சி சபைகளான மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரம் மாகாணசபைக்கு வழங்கப்பட்டது. அது நாள் வரை மத்திய அரசாங்கத்தின் நேரடி கண்காணிப்பின் கீழிலிருந்த உள்ளூராட்சி சபைகள் புதிதாக உருவாக்கப்பட்டு மாகாண சபைகளின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதேவேளை மாகாணசபைகள் எவ்வாறான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதனை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் நிர்ணயித்ததுடன் மாகாண சபைகளின் நியதிச் சட்டங்கள் என்ன என்பது பற்றி குறிப்பிட்டுள்ளது. இதன்படி உறுப்புரை 154 பு (1) இல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. “Every Provincial Council may, Subject to the Provisions of the Constitution make statutes applicable to the Province for which it is established, with respect to any matter set out n List I of the Ninth Schedule (Hereinafter reoffered to as “the Provincial Council List”) “ஒவ்வொரு மாகாண சபையும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக (இதனகத்துப் பின்னர் ‘‘மாகாணசபை நிரல்’’ எனக் குறிப்பீடு செய்யப்படுவதன்) ஒன்பதாம் அட்டவணையின் ஐ ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் எம்மாகாணத்திற்கென அச்சபை ஆரம்பிக்கப்பட்டதோ அம்மாகாணத்திற்கு ஏற்புடையனவா நியதிச் சட்டங்களை ஆக்கலாம்’

இவ்வுறுப்புரையின்படி, மாகாணசபை 13 ஆவது திருத்தச் சட்டதின் ஒன்பதாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை மாகாணசபை கொண்டிருப்பதுடன் மாகாணத்திற்கு ஏற்புடையனவா தொடர்பாக ஏதேனும் நியதிச் சட்டங்களையும் ஆக்கலாம்.

உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாணசபைக்கும் இடையிலுள்ள உறவும், அதிகாரமும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்பதாம் அட்டவணையில் ‘மாகாணசபை நிரல்’ எனும் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் உறுப்புரை 4.1 இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. “Local authorities for the purpose of local government and village administration, such as Municipal Councils, Urban Councils and Pradesshiya Sabhas, except that, the constitution, form and structure of local authorities shall be determined by law’’ “உள்ளூராட்சி, கிராம நிருவாகம் என்ற நோக்கங்களுக்காக மாநகரசபைகள், நகர சபைகள், பிரதேசசபைகள் போன்ற உள்ளூரதிகார சபைககள் ஆயின் உள்ளூரதிகார சபைகளின் அமைப்பும் மாதிரியும் கட்டமைப்பும் சட்டத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்’’ ற இங்கு மாகாணசபையானது உள்ளூராட்சி மற்றும் கிராம நிர்வாகம் என்ற நோக்கங்களுக்காக செயற்படும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்பது வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

## பிரதேசபைத் தத்துவத்தின் கீழ் தோட்டக் குடியிருப்புகள் உள்ளடக்கப்படும் வகையில் சட்ட திருத்தமொன்றினை நாடாளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும்

மேலும் உறுப்புரை 4.3 "Local authorities will have the powers vested in them under existing law. Municipal Councils and Urban Councils will have the powers vested in them under the Municipal Councils Ordinance and the Urban Councils Ordinance. Pradeshiya Sabhas will have the powers vested in them under existing law. It will be open to a Provincial Council to confer additional powers on local authorities but not to take away their powers'' ''உள்ளூரதிகார சபைகளுக்குத் தற்போதுள்ள சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களையே அவை கொண்டிருக்கும். மாநகரசபைகளும், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் அவற்றுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டிருக்கும். தற்போதுள்ள சட்டத்தின் கீழ் பிரதேச சபைகளும் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களை பிரதேசசபைகள் கொண்டிருக்கும். மாகாணசபை உள்ளூரதிகார சபைகளும் மேலதிக தத்துவங்களை அளிக்கக்ககூடும். ஆனால் அவற்றின் தத்துவங்களை அகற்ற முடியாது.

மேற்கூறப்பட்ட உறுப்புரையில் பிரதேச சபைகள் உள்ளிட்ட ஏனைய சபைகள் அவற்றிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களையே கொண்டிருக்கும். அதேவேளை மாகாண சபையினால் மேலதிக தத்துவங்களை வழங்க முடியும். ஆனால் அச்சபைகள் கொண்டுள்ள தத்துவங்களை மாற்றுவதற்கு மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை. இது எதனை வெளிப்படுத்துகின்றது எனில் பிரதேசசபை உள்ளிட்ட ஏனைய சபைகள் தாம் கொண்டுள்ள அதிகாரத்தை அவ்வாறே பயன்படுத்த வேண்டும். இதன்படி பிரதேச சபைகளினால் ஓரங்கட்டப்பட்ட தோட்டக் குடியிருப்புகளை மாகாண சபைகளும் பின்பற்ற வேண்டும். மறுவகையில் கூறுவதாயின், மாகாண சபைகளுக்கும் தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி வேலைகளை சட்டபூர்வமாக மேற்கொள்ளும் அதிகாரம் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் வழங்கப்படவில்லை.

இதனை மேலும் வலியுறுத்தும் வகையில் உறுப்புரை 4.4 இல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. ''Gramodaya Mandalayas will have the powers vested in Gramodaya Mandadaiayas under existing law. It will be open to a Provincial Council to confer additional powers on Gramodaya Mandalayas.'' 'தற்போதுள்ள சட்டத்தின் கீழ் கிராமோதய சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களேயே கிராமோதய சபைகள் கொண்டிருக்கும். மாகாணசபை கிராமோதய சபைகளுக்கு மேலதிக தத்துவங்களை அளிக்கக்கூடும்'' இவ்வுறுப்புரையின் மூலம் கிராமோதய சபை தத்துவங்களே தொடர்ந்தும் வழக்கில் இருக்கும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

## இவ்வுரிமை மறுப்பு பிரச்சினைக்கு தீர்வு காணுதல் அவசியமாகும்

அத்துடன் உறுப்புரை (10) இல் 'village development' கிராம அபிவிருத்தி எனத் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கும் தோட்டக் குடியிறுப்பு அபிவிருத்தி பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் உறுப்புரை 4.2 இல் இச்சபைகளை கலைப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. 4.2 "Supervision of the administration of local authorities established by law, including the power of dissolution (subject to such quasi-judicial inquiries into the grounds for dissolution, and legal remedies in respect thereof, as may be provided by law, and subject to provisions relating to audit as may be provided by law)" ''கலைப்பதற்கான தத்துவம் உட்பட (சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறு, கலைத்தற்கான ஏதுக்கள் பற்றிய அத்தகைய நீதிமுறை மருவிய விசாரணைகளுக்கும் அவை தொடர்பிலான சட்டப்படியான பரிகாரங்களுக்கும் அமையவும் அத்துடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறாகக் கணக்காய்வு தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமையவும்) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் நிருவாகத்தை மேற்பார்வை செய்தல்'' இதன்படி பிரதேச சபையொன்று தமது தத்தவங்களுக்கு மாறாக செயற்படின் அதனை கலைக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு உண்டு.

மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்களை நோக்குவோமாயின் மாகாண சபைக்கு தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு அதிகாரமில்லை முதலாவது மத்திய மாகாண சபை முதலமைச்சர் தோட்டக் குடியிருப்புகளின் அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை எனக் கூறியமை எதனடிப்படையில் என்பதனை இங்கு தெளிவாகப் புரிந்துக்கொள்ளலாம். ஆகையால் காலம் கடந்தேனும் இவ்வுரிமை மறுப்பு பிரச்சினைக்கு தீர்வு காணுதல் அவசியமாகும்.

அரசாங்கம் கொண்டுவர முயலும் 'ஜனசபா' முறைக்கு முன்பதாக இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். இல்லாவிடில், மலையக தோட்டக் குடியிருப்பு மக்கள் வெறும் வாக்களிக்கும் பிரஜைகளாகவே தொடர்ந்தும் இருப்பார்கள்.

ஆகையால் பிரதேசசபைத் தத்ததுவத்தின் கீழ் தோட்டக் குடியிருப்புகள் உள்ளடக்கப்படும் வகையில் சட்ட திருத்தமொன்றினை நாடாளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும். இவ்விடயத்தில் மலையக மக்களால் நாடாளுமன்றத்திற்கும் ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கட்சி வேறுபாடுகளை துறந்து ஒருமித்து, குரலெழுப்பி இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

இதேவேளை சிவில் அமைப்புகளும் இது தொடர்பாக மக்கள் மத்தியில் பரப்புரை மேற்கொண்டு அரசாங்கத்திற்கு அழுத்தத்தை கொடுப்பது இன்றியமையாததாகும்.

***தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள மாகாண சபைக்கும் அதிகாரமில்லை***
***02.10.2011 வீரகேசரி - பெ.முத்துலிங்கம்***

# தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள மாகாண சபைக்கும் அதிகாரமில்லை

பெ.முத்துலிங்கம்

**தோட்டக்** குடியிருப்புகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச சபைகளுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பதனை வெளிக்கொணரும் வகையில் பிரதேச சபைகளுக்கான சட்ட உறுப்புரைகளையும் அதனோடு தொடர்புள்ள கிராம சபை கட்டளைச் சட்டத்தையும் பற்றி கடந்த வார கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். அத்துடன் அக்கட்டுரையில் மாகாண சபைக்கும் தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரமில்லை என்பதனை முதலாவது மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் கூறிய கூற்றினை மேற்கோள்காட்டி யிருந்தேன். கட்டுரையின் நீட்சியைக் கருத்திற் கொண்டு தோட்டக் குடியிருப்புகள் தொடர்பாக மாகாண சபை கொண்டுள்ள அதிகாரத்தை விளக்கவில்லை. ஆகையால் இக்கட்டுரையில் மாகாண சபை தோட்டக் குடியிருப்புகளின் அபிவிருத்தி தொடர்பாக எவ்வாறான அதிகாரத்தினைக் கொண் டுள்ளது என்பதனைப் பற்றி விளக்க முயல் கின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15ஆவது இலக்க பிரதேச சபை சட்டம் 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் பதினாறாம் திகதி அமுலாக்கப் பட்டது. மத்திய அரசாங்கத்தின் நிர்வாக பணிகளை பன்முகப்படுத்தும் (Decentralized) நோக்கிலேயே பிரதேச சபைச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதற்கமைய

**பிரதேச சபைத் தத்துவத்தின் கீழ் தோட்டக் குடியிருப்புகள் உள்ளடக்கப்படும் வகையில் சட்ட திருத்தமொன்றினை நாடாளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும்**

1979-1987 வரை நடைமுறையிலிருந்த அபிவிருத்தி சபை நீக்கப்பட்டு அதனிடத்தே பிரதேச சபை அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதேச சபைச் சட்டம் கொண்டுவரப்பட்ட காலக்கட்டத்தில் அதிகாரப் பகிர்வினை (Devolution) கோரி போராடிய வடக்கு கிழக்கு மக்களது போராட்டம் வலுப்பெற்ற துடன் சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக குறிப்பாக இந்தியாவின் அழுத்தம் காரணமாக இலங்கை அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிரும் நிலைக்குத்தள்ளப்பட்டது. இதனால் ராஜீவ்-ஜே.ஆர் உடன்படிக்கை 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. இவ் உடன்படிக்கையின் விளைவாக மாகாணங்களுக்கு அதிகாரத்தை பகிரும் வகையில் இலங்கை அரசாங்கம் அரசியலமைப்பிற்கு 13ஆவது திருத்தச் சட்டத்தினைக் கொண்டுவந்தது. இப்பதின் மூன்றாவது திருத்தச் சட்டத்திற்கமைய இலக்கம் 42ஐக் கொண்ட மாகாண சபைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பதின்மூன்றாவது அரசியலமைப்பு சீர்திருத்தம் 1987 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. இதன்படி பிரதேச சபைச் சட்டம் அமுலுக்கு வந்த ஏழு மாதங்களுக்குப் பின்னரே மாகாண சபை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கமைய உள்ளூராட்சி சபைகளான மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்டது. அதுநாள் வரை மத்திய அரசாங்கத்தின் நேரடி கண்காணிப் பின் கீழிலிருந்த உள்ளூராட்சி சபைகள் புதிதாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளின் கீழ் கொண்டுவரப் பட்டன.இதேவேளை மாகாண சபைகள் எவ்வாறான அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதனை அரசியலமப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் நிர்ணயித்தததுடன் மாகாண சபைகளின் நியதிச் சட்டங்கள் என்ன என்பது பற்றி குறிப்பிட்டுள்ளது. இதன்படி உறுப்புரை 154 பு (1) இல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. . " Every Procincial Council may, subject to the provisons of the Constitution make statutes applicable to the Province for which it is established, with respect to any matter set out n List I of the Ninth Schedule ( hereinafter reffered to as " the Prvincial Council List") " 'ஒவ்வொரு மாகாண சபையும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக (இதனகத்துப் பின்னர் 'மாகாண சபை நிரல்' எனக் குறிப்பீடு செய்யப்படுவதன்) ஒன்பதாம் அட்டவணையின் ஐ ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் எம்மாகாணத்திற்கென அச்சபை ஆரம் பிக்கப்பட்டதோ அம்மாகாணத்திற்கு ஏற் புடையனவா நியதிச் சட்டங்களை ஆக்கலாம்.'

இவ்வுறுப்புரையின்படி மாகாணசபை 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைக் மாகாண சபை கொண்டிருப்பதுடன், மாகாணத்திற்கு ஏற்புடையனவா தொடர்பாக ஏதேனும் நியதிச் சட்டங்களையும் ஆக்கலாம்.

உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாண



சபைக்கும் இடையிலுள்ள உறவும், அதிகார்மும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்பதாம் அட்டவணையில் 'மாகாணசபை நிரல்' எனும் தலைப்பின் கீழ் குறிப்பிடப் பட்டுள்ளது. அதன் உறுப்புரை 4.1 இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "Local authorities for the purpose of local government and village administration, such as Municipal Councils, Urban Councils and Pradeshiya Sabhas, except that, the constitution, form and structure of local authorities shall be determined by law" 'உள்ளூராட்சி, கிராம நிருவாகம் என்ற நோக்கங்களுக்காக மாநகரசபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் போன்ற உள்ளூரதிகார சபைகள் ஆயின் உள்ளூரதிகார சபைகளின் அமைப்பும் மாதிரியும் கட்டமைப்பும் சட்டத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்'ற இங்கு மாகாண சபையானது உள்ளூராட்சி மற்றும் கிராம நிர்வாகம் என்ற நோக்கங்களுக்காக செயற்படும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்பது வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

மேலும் உறுப்புரை 4.3 " Local authorities will have the powers vested in them under existing law. Municipal Councils and Urban Councils will have the powers vested in them under the Municipal Councils Ordinance and the Urban Councils Ordinance. Pradeshiya

**இவ்வுரிமை மறுப்பு பிரச்சினைக்கு தீர்வு காணுதல் அவசியமாகும்**

Sabhas will have the powers vested in them under existing law. It will be open to a Provincial Council to confer additional powers on local authorities but not to take away their powers" " 'உள்ளூரதிகார சபைகளுக்குத் தற்போதுள்ள சட்டத்தின் கீழ் உரித்தாக் கப்பட்ட தத்துவங்களையே அவை கொண்டி ருக்கும். மாநகரசபைகளும், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் அவற்றுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டிருக்கும். தற்போதுள்ள சட்டத்தின் கீழ் பிரதேச சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களை பிரதேச சபைகள் கொண்டி ருக்கும். மாகாண சபை உள்ளூரதிகார சன்பகளுக்கு மேலதிகத் தத்துவங்களை அளிக்கக் கூடும். ஆனால் அவற்றின் தத்ததுவங்களை அகற்ற முடியாது'

மேற்கூறப்பட்ட உறுப்புரையில் பிரதேச சபைகள் உள்ளிட்ட ஏனைய சபைகள் அவற்றிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களையே கொண்டிருக்கும். அதேவேளை மாகாண சபையினால் மேலதிக தத்ததுவங்களை வழங்க முடியும். ஆனால் அச்சபைகள் கொண்டுள்ள தத்துவங்களை மாற்றுவதற்கு மாகாண சபைக்கு அதிகாரமில்லை. இது எதனை வெளிப்படுத்துகின்றது எனில் பிரதேசசபை உள்ளிட்ட ஏனைய சபைகள் தாம் கொண்டுள்ள அதிகாரத்தை அவ்வாறே பயன்படுத்த வேண்டும். இதன்படி பிரதேச சபைகளினால் ஓரங்கட்டப்பட்ட தோட்டக் குடியிருப்புகளை மாகாண சபைகளும் பின்பற்ற வேண்டும். மறுவகையில் கூறுவதாயின் மாகாண சபைகளுக்கும் தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி வேலைகளை சட்டபூர்வமாக மேற்கொள்ளும் அதிகாரம் 13ஆவது திருத்தச் சட்ட மூலம் வழங்கப்படவில்லை.

இதனை மேலும் வலியுறுத்தும் வகையில் உறுப்புரை 4.4இல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "Gramodaya Mandalayas will have the powers vested in Gramodaya Mandalayas under existing law. It will be open to a Provincial Council to confer additional powers on Gramodaya Mandalayas. " 'தற்போதுள்ள சட்டத்தின் கீழ் கிராமோதய சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்க ளேயே கிராமேதய சபைகள் கொண்டிருக் கும். மாகாண சபை கிராமோதய சபைகளுக்கு மேலதிக தத்துவங்களை அளிக்கக் கூடும்'. இ' இவ்வுறுப்புரையின் மூலம் கிராமோதய சபை தத்துவங்களே தொடர்ந்தும் வழக்கில் இருக்கும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் உறுப்புரை (10) இல் 'village development கிராம அபிவிருத்தி எனத் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கும் தோட்டக் குடியிறுப்பு அபிவிருத்தி பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் உறுப்புரை 4.2 இல் இச்சபைகளை கலைப்பதற்கும் மேற்பார்வை செய்வதற் குமான அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. 4.2 "Supervision of the administration of local authorities established by law, including the power of dissolution (subject to such quasi-judicial inquiries into the grounds for dissolution, and legal remedies in respect thereof, as may be provided by law, and subject to provisions relating to audit as may be provided by law);" "'கலைப்பதற்கான தத்ததுவம் ... ட்பட (சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட ... கூடியவாறு, கலைத்தற்கான ஏதுக்கள் பற்றிய அத்தகைய நீதிமுறை மருவிய விசாரணைகளுக்கும் அவை தொடர்பிலான சட்டப்படியான பரிகாரங்களுக்கும் அமையவும் அத்துடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறு கணக்காய்வு தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமையவும்) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் நிருவாகத்தை மேற்பார்வை செய்தல்' இ.இ.இதன்படி பிரதேச சபையொன்று தமது தத்து வங்களுக்கு மாறாக செயற்படின் அதனை கலைக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு உண்டு.

மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்களை நோக்குவோமாயின், மாகாண சபைக்கு தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு அதிகாரமில்லை. முதலாவது மத்திய மாகாண சபை முதலமைச்சர் தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு மாகாண சபைக்கு அதிகாரமில்லை எனக் கூறியமை இதனடிப்படையில் என்பதனை இங்கு தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். ஆகையால் காலம் கடந்தேனும் இவ்வுரிமை மறுப்பு பிரச்சினைக்கு தீர்வு காணுதல் அவசியமாகும்.

அரசாங்கம் கொண்டுவர முயலும் 'ஜனசபா' முறைக்கு முன்பதாக இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். இல்லாவிடில் மலையக தோட்டக் குடியிருப்பு மக்கள் வெறும் வாக்களிக்கும் பிரஜைகளாகவே தொடர்ந்தும் இருப்பார்கள்.

ஆகையால் பிரதேச சபைத் தத்ததுவத்தின் கீழ் தோட்டக் குடியிருப்புகள் உள்ளடக் கப்படும் வகையில் சட்ட திருத்தமொன் றினை நாடாளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும். இவ்விடயத்தில் மலையக மக்களால் நாடாளுமன்றத்திற்கும் ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கட்சி வேறுபாடுகளை துறந்து ஒருமித்து, குரலெழுப்பி இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

இதேவேளை சிவில் அமைப்புகளும் இது தொடர்பாக மக்கள் மத்தியில் பரப்புரை மேற்கொண்டு அரசாங்கத்திற்கு அழுத்தத்தை கொடுப்பது இன்றியமையாததாகும்.

## பிரதேசசபை திருத்தச் சட்டத்திற்காக காத்திருக்கும் மலையக மக்கள்

இலங்கைத் தேயிலை இவ்வருடத்துடன் நூற்றி ஐம்பது வருட வரலாற்றை எய்துகின்றது. நூற்றி ஐம்பது வருட வரலாற்றை நினைவுகூர தேயிலைத்துறையின் முகாமைத்துவங்களும் தோட்டத்துறை அமைச்சும் முனைகின்றன. இலங்கைத் தேயிலையின் வரலாற்றிற்கு நூற்றி ஐம்மது வருடமாகின்றபோது, அத்தேயிலைத் தொழிலில் ஈடுபட்டு வரும் தமிழ் தொழிலாளர் பரம்பரையினர் நூற்றித் தொண்ணூற்றி மூன்று வருட வரலாற்றைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

பிரித்தானியரால் கோப்பித் தொழிற்றுறை 1823 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பதிவின் படி 1824 ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலிருந்து முதல் தொழிலாளர் குழு இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர். அன்றிலிருந்து 1941 ஆம் ஆண்டுவரை தென்னிந்திய தமிழ் தொழிலாளர்களின் வருகையும். செல்கையும் நடைபெற்றதுடன், படிப்படியாக நிரந்தரத் தொழிலாளர்களாக இலங்கையின் தோட்டங்களில் தங்கவும் ஆரம்பித்தனர்.

1867 இல் கோப்பிப் பயிர்ச்செய்கையை நோய் தாக்கவே ஜேம்ஸ் டெய்லர் என்ற தோட்டப் பயிர்ச்செய்கையாளரால் தேயிலை பயிர் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பயிர் வெற்றிகரமாக வளர்ந்த நிலையில், தென்னிந்தியாவிலிருந்து வந்த தொழிலாளர்களின் தொகை அதிகரித்ததுடன் நிரந்தரமாகத் தங்குதல் மேலும் அதிகரித்தது. 1948 ஆம் ஆண்டை அண்மிக்கையில் பத்து லட்சம் தமிழ் தொழிலாளர்கள் தோட்டப்புறங்களில் நிரந்தரமாக வாழ்ந்துள்ளனர். தேயிலை உற்பத்தியுடன் நாட்டில் இரும்புப் பாதைகள், கற்பாதைகள் மற்றும் துறைமுகம் உள்ளிட்ட அனைத்து உட்கட்டுமானங்களும் உருவாக்கப்பட்டன.

இவ்வனைத்து உட்கட்டுமான பணிகளிலும் தென்னிந்தியத் தமிழ் தொழிலாளர்கள் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டனர். தேயிலை உற்பத்தியுடன் மாநகரங்கள், நகரங்கள் மற்றும் பட்டினங்கள் உருவாக்கப்பட்டன.

இம்மாநகரங்களிலும் பட்டினங்களிலும் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளில் சிற்றூழியர்களாக தென்னிந்திய தமிழர்களே பணியில் அமர்த்தப்பட்டனர். கோப்பி மற்றும் தேயிலை உற்பத்தியின் விளைவாக இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார தளத்தில் பாரிய பரிமாற்றம் ஏற்பட்டது. நாட்டு மக்களது கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் பாரிய மாற்றம் ஏற்பட்டதுடன் நாடு பல வகையில் செழிப்புற்றது.

ஆனால் நாடும் மக்களும் செழிப்புற தம்மை அர்ப்பணித்த தோட்ட மற்றும் நகர்புற தமிழ் தொழிலாளர்களுக்கு அப்பலனை அனுபவிக்க வாய்ப்பு கிட்டவில்லை. நாடு சுதந்திரமடைவதற்கு முன்னர் பிரித்தானிய காலனியாதிக்கவாதிகள் குடியமர்த்தப்பட்டவர்களாகவிருந்த தோட்ட மற்றும் நகரத் தொழிலாளர்களை இலங்கை நாட்டின் பிரஜைகளாகக் கருதி அவர்களுக்கும் சர்வசன வாக்குரிமையை 1931இல் வழங்கினர். இதனை சுதேச அரசியல் தலைவர்களான டி.எஸ் சேனாநாகயக்க மற்றும் எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டாரநாயக்க கடுமையாக எதிர்த்தனர். ஆனால் அம்முயற்சியில் தற்காலிகத் தோல்வியைக் கண்டனர். இதன் விளைவு டொனமூர், சோல்பரி அரசியல்மைப்புகளில் இம்மக்கள் உள்வாங்கப்பட்டதுடன் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பினையும் பெற்றிருந்தனர்.

ஆனால் 1935 இல் கிராம சபைகளுக்கான திருத்தச்சட்டம் கொண்டு வருகையில் தோட்ட மக்கள் உள்வாங்கப்படுவதை தடுப்பதில் மேற்கூறப்பட்ட இரு தலைவர்களும் வெற்றி கண்டனர். இத்திருத்தச் சட்டம் மூலமாக தோட்ட மக்கள் கிராமசபைகளில் பங்குகொள்வது தடை செய்யப்பட்டது. இத்தடை பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கும் விரிவாக்கப்பட்டது.

இதன் மூலம் கிராம சபைகளிலும் ஏனைய உள்ளூராட்சி மன்றகளில் இம்மக்கள் பங்குக்கொள்வதும் மற்றும் அதன் மூலம் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை பெறும் வாய்ப்பும் இல்லாதொழிக்கப்பட்டது. இவ் ஓரங்கட்டலை முழுமையாக ஆக்கும் வகையில் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தவுடன் சுதந்திர நாட்டின் பிரதமராகிய டீ.எஸ்.சேனாநாயக்க பிரஜா உரிமை சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் இம்மக்கள் கல்வி, காணி, வீடு, சுகாதாரம் முதலிய உரிமைகளை அனுபவிக்கும் வாய்ப்பினை இல்லாதொழித்தார். இரண்டு நூற்றாண்டை அண்மிக்கும் வேளையிலும் இன்றைய மலையக மக்கள் அபிவிருத்தியை சமனாக அனுபவிக்கும் வாய்ப்பை இழந்து நிற்கின்றனர்.

1948 ஆம் ஆண்டு மறுக்கப்பட்ட பிரஜாவுரிமை பிரச்சினை 2003 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்துடன் அனைத்து மலையக மக்களும் குடியுரிமை பெற்றவராக அங்கீகரிக்கப்பட்ட போதிலும் இன்றும் பிரதேச

சபைகளினால் வழங்கப்படும் அபிவிருத்தியை சமமாக அனுபவிக்க முடியாதுள்ளனர். 1994 ஆம் ஆண்டு முதல் இப்பிரச்சினை பற்றி ஏற்புரை செய்யப்பட்டு வந்தபோதிலும், இவ்வுரிமை மறுப்பினை மலையக தலைமைகள் புரிந்துக்கொள்ள பல வருடங்கள் எடுத்தன. 2008 ஆம் ஆண்டு உடபலாத்த பிரதேசசபை கலைக்கப்பட்ட பின்னரே இதனை புரிந்துக்கொண்டனர்.

மஹிந்த ஆட்சியின் இறுதிக் காலத்தில் இவ்வுரிமை மறுப்பினை நீக்கும் வகையில் முன்னால் அமைச்சர் தினேஸ்குணவர்தன சட்டதிருத்தம் கொண்டு வர முனைந்தார். ஆனால் ஆட்சி கலைந்தமையினால் இம்முயற்சி நடைபெறாமல் போய்விட்டது. புதிய நல்லாட்சியின் நூறு நாள் வேலைத்திட்த்தின் கீழ் இப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அம்முயற்சியும் பயனற்று போய்விட்டது.

பின்னர் 2015 ஆம் ஆண்டு உருவான புதிய பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மலையக பிரதிநிகளான திலகராஜ், வேலுகுமார் போன்றோரால் இப்பிரச்சினை முன்வைக்கப்பட்டதுடன் எதிர்கட்சிகள் உட்பட ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இப்பிரச்சினையை வியப்புடன் நோக்கி கேள்வி எழுப்பியதுடன் அதற்கு பதிலளித்த உள்ளூராட்சி அமைச்சர் முஸ்தபா இப்பிரச்சினையைத் தீர்க்க 1987 முதல் மலையக அரசியல் தலைமைகளினால் ஒரு திருத்தச் சட்டத்தை கொண்டு வரமுடியாமற் போனது துரதிஸ்டம் என ஆங்கிலத்தில் கூறி இதனை ஒரு தேசிய தேவையாகக் கருதி பிரதேசசபை சட்டத்திற்குள் மலையக தோட்டப் பகுதிவாழ் மக்கள் பயனடையும் வகையில் உடனடியாக சட்டத்தித்தம் கொண்டு வருவதாக ஆங்கிலத்தில் உரையாற்றினார். It is unfortunate that from 1987 the political leaders representing the plantation sector have been unable to make this simple amendment. I discussed this matter with my Deputy Minister who represent Ratnapura DUstrict where there are lots of plantations. He continuously agitated that we should look at this in nationalistic way. We are all Sri Lankans and l assure you that we will bring in this amendment, which, I see, is a national me" (Hanzard - 01.12.2015)

இதனைத் தொடர்ந்து 2016 ஜனவரி 1ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பிரச்சினை 6 ஆவது விடயமாக கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் அதில் பின்வருமாறு குறிப்பிட்டு திருத்தம் கொண்டு வர அனுமதியும் வழங்கப்பட்டது "It has been identified that removal of legal obstacles is essential to provide utilities to estate settlements.

Accordingly the proposal made by Ho, Faizer Mustafa, Minister of Provincial Councils and Local Government, to draft amendments to the Pradedeshiya Sabha Act no 15 of 1987 to enable the use of Pradeshiya Sabha Fund for the above purpose was approves by the Cabinet of Ministers"

மலையக மக்களின் இவ்வுரிமை மறுப்பினை தேசிய தேவையை கருதி உடனடியாக திருத்தம் கொண்டுவருவதாக அமைச்சர் பைசர் முஸ்தபா கூறி, அமைச்சரவையில் அதற்கான அனுமதியை பெற்ற போதிலும் சரியாக ஒரு வருடம் கழிந்துவிட்டது. ஆனால் இதுவரை சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவில்லை.

தாமதமாக வழங்கும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமாகும் (Late justice is equal for denied justice) என்பதனை அனைவரும் நன்கு அறிவார். மலையக அரசியல் தலைமைகளின் தவறினை சுட்டிக்காட்டிய அமைச்சர் பைசர் முஸ்தபா இவ்வாறு இழுத்தடிப்புச் செய்வது கவலையளிக்கின்றது. அமைச்சர் பாராளுமனிறத்தில் கூறியதுபோல் இது தேசிய தேவையென்பதுடன் நாட்டின் பிரஜைகளது அடிப்படை உரிமையாகும். நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் அமைச்சர் என்ற வகையில் விரைவில் இப்பிரச்சினைக்கு தீர்வினைப்பெற்றுக் கொடுக்க அவர் முன்வர வேண்டும்.

மறுபுறம் மலையக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற பிரதிநிகள் இவ்விழுத்தடிப்பிற்கு எதிராக பாராளுமன்றத்தில் மீண்டும் இப்பிரச்சினையை மேலெழுப்பி, விரைவில் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரும் செயற்பாட்டில் இறங்க வேண்டும். ஒரு சிறு திருத்தச் சட்டத்தை கொண்டுவர அரசாங்கம் ஒரு வருடத்திற்கு மேலாக காலம் எடுப்பது என்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். மறுபுறம் இவ்வளவு காலதாமதம் தொடர்பாக பாராளுமன்றத்தில் மலையக பிரதிநிகள் குரலெழுப்பாது மௌனம் காப்பது கவலைக்குரியதாகும்.

***பிரதேசசபை திருத்தச் சட்டத்திற்காக காத்திருக்கும் மலையக மக்கள்***
***வீரகேசரி 05.03.2017 பெ.முத்துலிங்கம்***

# பிரதேசசபை திருத்தச் சட்டத்திற்காக காத்திருக்கும் மலையக மக்கள்

இலங்கைத் தேயிலை இவ்வருடத்துடன் நூற்றி ஐம்பது வருட வரலாற்றை எய்துகின்றது. இந் நூற்றி ஐம்பது வருட வரலாற்றை நினைவுகூர தேயிலைத்துறையின் முகாமைத்துவங்களும், தோட்டத்துறை அமைச்சும் முனைகின்றன. இலங்கைத் தேயிலையின் வரலாற்றிற்கு நூற்றி ஐம்பது வருடமாகின்றபோது, அத்தேயிலைத் தொழிலில் ஈடுபட்டு வரும் தமிழ் தொழிலாளர் பரம்பரையினர் நூற்றித் தொண்ணூற்றி மூன்று வருட வரலாற்றைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

பிரித்தானியரால் கோப்பித் தொழிற்றுறை 1823 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பதிவின் படி 1824 ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலிருந்து முதல் தொழிலாளர் குழு இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர். அன்றிலிருந்து 1941 ஆம் ஆண்டுவரை தென்னிந்திய தமிழ் தொழிலாளர்களின் வருகையும், செல்கையும் நடைபெற்றதுடன், படிப்படையாக நிரந்தரத் தொழிலாளர்களாக இலங்கையின் தோட்டங்களில் தங்கவும் ஆரம்பித்தனர்.

1867 இல் கோப்பிப் பயிர்ச்செய்கையை நோய் தாக்கவே ஜேம்ஸ் டெய்லர் என்ற தோட்டப்பயிர்ச் செய்கையாளரால் தேயிலைப் பயிர் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பயிர் வெற்றிகரமாக வளர்ந்த நிலையில், தென்னிந்தியாவிலிருந்து வந்த தொழிலாளர்களின் தொகை அதிகரித்ததுடன் நிரந்தரமாகத் தங்குதல் மேலும் அதிகரித்தது. 1948 ஆம் ஆண்டை அண்மிக்கையில் பத்து லட்சம் தமிழ் தொழிலாளர்கள் தோட்டப்புறங்களில் நிரந்தரமாக வாழ்ந்துள்ளனர்.

தேயிலை உற்பத்தியுடன் நாட்டில் இருப்புப்பாதைகள், கற்பாதைகள், மற்றும் துறைமுகம் உள்ளிட்ட அனைத்து உட்கட்டுமானங்களும் உருவாக்கப்பட்டன.

இவ்வனைத்து உட்கட்டுமானப் பணிகளிலும் தென்னிந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள் பெருமளவில ஈடுபடுத்தப்பட்டனர். தேயிலை உற்பத்தியுடன் மாநகரங்கள், நகரங்கள், மற்றும் பட்டினங்கள் உருவாக்கப்பட்டன.

இம் மாநகரங்களிலும், பட்டினங்களிலும் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளில் சிற்றூழியர்களாக தென்னிந்திய தமிழர்களே பணியில் அமர்த்தப்பட்டனர். கோப்பி மற்றும் தேயிலை உற்பத்தியின் விளைவாக



இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார தளத்தில் பாரிய பரிமாற்றம் ஏற்பட்டது. நாட்டு மக்களது கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் பாரிய மாற்றம் ஏற்பட்டதுடன் நாடு பல வகையில் செழிப்புற்றது.

ஆனால், நாடும் மக்களும் செழிப்புற தம்மை அர்ப்பணித்த தோட்ட மற்றும் நகர்புற தமிழ் தொழிலாளர்களுக்கு அப்பலனை அனுபவிக்க வாய்ப்பு கிட்டவில்லை.

நாடு சுதந்திரமடைவதற்கு முன்னர் பிரித்தானிய காலனியாதிக்கவாதிகள் குடியமர்த்தப்பட்டவர்களாகவிருந்த தோட்ட மற்றும் நகரத் தொழிலாளர்களை இலங்கை நாட்டின் பிரஜைகளாகக் கருதி அவர்களுக்கும் சர்வசன வாக்குரிமையை 1931 இல் வழங்கினர். இதனை சுதேச அரசியல் தலைவர்களான டீ.எஸ். சேனாநாயக்க, மற்றும் எஸ்.டபிள்யு.ஆர். டீ. பண்டாரநாயக்க கடுமையாக எதிர்த்தனர். ஆனால் அம்முயற்சியில் தற்காலிகத் தோல்வியைக் கண்டனர். இதன் விளைவு டொனமூர், சோல்பரி அரசியலமைப்புகளில் இம்மக்கள் உள்வாங்கப்பட்டதுடன் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பினையும் பெற்றிருந்தனர்.

ஆனால், 1935 இல் கிராமசபைகளுக்கான திருத்தச்சட்டம் கொண்டுவருகையில் தோட்ட மக்கள் உள்வாங்கப்படுவதை தடுப்பதில் மேற்கூறப்பட்ட இரு தலைவர்களும் வெற்றிகண்டனர். இத்திருத்தச் சட்டம் மூலமாக தோட்ட மக்கள் கிராமசபைகளில் பங்கு கொள்வது தடை செய்யப்பட்டது. இத்தடை பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கும் விரிவாக்கப்பட்டது.

இதன் மூலம் கிராம சபைகளிலும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் இம் மக்கள் பங்குகொள்வதும் மற்றும் அதன் மூலம் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை பெறும் வாய்ப்பும் இல்லாதொழிக்கப்பட்டது. இவ் ஓரங்கட்டலை முழுமையாக ஆக்கும் வகையில் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தவுடன் சுதந்திர நாட்டின் பிரதமராகிய டி.எஸ் சேனாநாயக்க பிரஜா உரிமை சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் இம்மக்கள் கல்வி, காணி, வீடு, சுகாதாரம் முதலிய உரிமைகளை அனுபவிக்கும் வாய்ப்பினை இல்லாதொழித்தார். இரண்டு நூற்றாண்டை அண்மிக்கும் வேளையிலும் இன்றைய மலையக மக்கள் அபிவிருத்தியை சமனாக அனுபவிக்கும் வாய்ப்பை இழந்து நிற்கின்றனர்.

1948 ஆம் ஆண்டு மறுக்கப்பட்ட பிரஜாவுரிமை பிரச்சினை 2003 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டத்துடன் அனைத்து மலையக மக்களும் குடியுரிமை பெற்றவராக அங்கீகரிக்கப்பட்ட போதிலும், இன்றும் பிரதேச சபைகளினால் வழங்கப்படும் அபிவிருத்தியை சமமாக அனுபவிக்க முடியாதுள்ளனர். 1994 ஆம் ஆண்டு முதல் இப்பிரச்சினைபற்றி ஏற்புரை செய்யப்பட்டு வந்தபோதிலும், இவ்வுரிமை மறுப்பினை மலையக தலைமைகள் புரிந்து கொள்ள

**பெ.முத்துலிங்கம்**

பல வருடங்கள் எடுத்தன. 2008 ஆம் ஆண்டு உடபலாத்த பிரதேச சபை கலைக்கப்பட்ட பின்னரே இதனை புரிந்துக்கொண்டனர்.

மஹிந்த ஆட்சியின் இறுதிக்காலத்தில் இவ்வுரிமை மறுப்பினை நீக்கும் வகையில் முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்தன சட்டதிருத்தம் கொண்டு வர முனைந்தார். ஆனால் ஆட்சி கலைந்தமையினால் அம்முயற்சி நடைபெறாமல் போய்விட்டது. புதிய நல்லாட்சியின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.அம்முயற்சியும்பயனற்று போய்விட்டது.

பின்னர் 2015 ஆம் ஆண்டு உருவான புதிய பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மலையக பிரதிநிதிகளான திலகராஜ், வேலு குமார் போன்றோரால் இப் பிரச்சினை முன்வைக்கப்பட்டதுடன் எதிர்கட்சிகள் உட்பட ஆளும் கட்சி உறுப்பினர்கள் (3ஆம் பக்கம் பார்க்க)

**பிரதேச சபை....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் இப்பிரச்சனையை வியப்புடன் நோக்கி கேள்வி எழுப்பியதுடன் அதற்கு பதிலளித்த உள்ளூராட்சி அமைச்சர் முஸ்தபா, இப்பிரச்சினையைத் தீர்க்க 1987 முதல் மலையக அரசியல் தலைமைகளினால் ஒரு திருத்தச் சட்டத்தை கொண்டு வரமுடியாமற் போனது துரதிஷ்டம் என ஆங்கிலத்தில் கூறி, இதனை ஒரு தேசிய தேவையாகக் கருதி பிரதேச சபை சட்டத்திற்குள் மலையக தோட்ட பகுதிவாழ் மக்கள் பயனடையும் வகையில் உடனடியாக சட்டத்திருத்தம் கொண்டு வருவதாக ஆங்கிலத்தில் உரையாற்றினார்;. I t is unfortunate that from 1987 the political leaders representing the plantation sector have been unable to make this simple amendment. I discussed this matter with my Deputy Minister who represent Ratnapura District where there are lots of plantations. He continuously agitated that we should look at this in nationalistic way. We are all Sri Lankans and I assure you that we will bring in this amendment, which, I see, is a national me" ( Hanzard – 01.12.2015)

இதனைத் தொடர்ந்து, 2016 ஜனவரி 1ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பிரச்சினை 6வது விடயமாக கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் அதில் பின்வருமாறு குறிப்பிட்டு திருத்தம் கொண்டு வர அனுமதியும் வழங்கப்பட்டது. " It has been identified that removal of legal obstacles is essential to provide utilities to estate settlements. Accordingly the proposal made by Ho, Faizer Mustafa, Minister of Provincial Councils and Local Government, to draft amendments to the Pradedeshiya Sabha Act no 15 of 1987 to enable the use of Pradeshiya Sabha Fund for the above purpose was approves by the Cabinet of Ministers"

மலையக மக்களின் இவ்வுரிமை மறுப்பினை தேசிய தேவையை கருதி உடனடியாக திருத்தம் கொண்டுவருதாக அமைச்சர் பைசர் முஸ்தபா கூறி, அமைச்சரவையில் அதற்கான அனுமதியை பெற்ற போதிலும் சரியாக ஒரு வருடம் கழிந்து விட்டது. ஆனால் இதுவரை சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவில்லை.

தாமதாக வழங்கும் நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு சமமாகும் (Late justice is equal for denied justice) என்பதனை அனைவரும் நன்கு அறிவார். மலையக அரசியல் தலைமைகளின் தவறினை சுட்டிக்காட்டிய அமைச்சர் பைசர் முஸ்தபா இவ்வாறு இழுத்தடிப்புச் செய்வது கவலையளிக்கின்றது.

அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியதுபோல் இது தேசிய தேவையென்பதுடன் நாட்டின் பிரஜைகளது அடிப்படை உரிமையாகும். நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் அமைச்சர் என்ற வகையில் விரைவில் இப்பிரச்சினைக்கு தீர்வினைப்பெற்றுக் கொடுக்க அவர் முன்வரவேண்டும்.

மறுபுறம் மலையக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதிகள் இவ்விழுத்தடிப்பிற்கு எதிராக பாராளுமன்றத்தில் மீண்டும் இப்பிரச்சினையை மேலெழுப்பி, விரைவில் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரும் செயற்பாட்டில் இறங்க வேண்டும்.

ஒரு சிறு திருத்தச் சட்டத்தை கொண்டு வர அரசாங்கம் ஒரு வருடத்திற்கு மேலாக காலம் எடுப்பது என்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். மறுபுறம் இவ்வளவு காலதாமதம் தொடர்பாக பாராளுமன்றத்தில் மலையக பிரதிநிதிகள் குரலெழுப்பாது மௌனம் காப்பது கவலைக்குரியதாகும்.

**ගරු මූලාසනාරූඪ මන්ත්‍රීතුමා**
(மாண்புமிகு தலைமைதாங்கும் உறுப்பினர் அவர்கள்)
(The Hon. Presiding Member)

සභාව කල් තැබීමේ යෝජනාව, ගරු මයිල්වාගනම් තිලකරාජා මන්ත්‍රීතුමා.

## වතු ප්‍රදේශවල සංවර්ධනයට ප්‍රාදේශීය සභා මට්ටමින් තිබෙන බාධා
## தோட்டப் பகுதிகளின் அபிவிருத்திக்குப் பிரதேச சபை மட்டத்திலுள்ள தடைகள்
## IMPEDIMENT AT PRADESHIYA SABHA LEVEL FOR DEVELOPMENT OF ESTATE AREAS

[பி.ப. 6.30]

**ගරු මයිල්වාගනම් තිලකරාජා මහතා**
(மாண்புமிகு மயில்வாகனம் திலகராஜா)
(The Hon. Mylvaganam Thilakarajah)

கௌரவ தலைமைதாங்கும் உறுப்பினர் அவர்களே, இந்த 8வது பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாகவும் 3வது முறையாக நீங்கள் தலைமை ஆசனத்திலிருக்கும்போது உரையாற்றக் கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. இன்றைய சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையின்போது மிக முக்கியமான ஓர் அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல் செய்யக் கோரும் எனது பிரேரணையை முன்மொழிகின்றேன்.

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேசச் சபைச் சட்டத்தின் 19வது பிரிவில் ரோமன் இலக்கத்தில் குறிப்பிடப்படும் 14 வது, 22வது மற்றும் 33வது பிரிவுகளைக் காரணம் காட்டி உடப்பளாத்த பிரதேச சபையைக் கலைக்கும் மத்திய மாகாண சபையின் கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. எனவே, கௌரவ தலைமைதாங்கும் உறுப்பினர் அவர்களே, நாம் அங்கம் வகிக்கும் பாராளுமன்றம் ஒரு சட்டவாக்கச் சபை என்ற வகையிலும் நாம் எல்லாம் சட்டவாக்குநர்கள் என்ற வகையிலும் இந்தச் சட்டச் சிக்கலை உள்வாங்கி - புரிந்துகொண்டு அதனைத் திருத்துவதற்கு முனைய வேண்டும் என்பதே எனது பிரேரணையின் நோக்கமாகும்.

---

**ගරු වේලු කුමාර් මහතා**
(மாண்புமிகு வேலு குமார்)
(The Hon. Velu Kumar)

මූලාසනාරූඪ ගරු මන්ත්‍රීතුමනි, සභාව කල් තබන අවස්ථාවේ ගරු මයිල්වාගනම් තිලකරාජා මන්ත්‍රීතුමා විසින් ඉදිරිපත් කර තිබෙන යෝජනාව පිළිබඳව වචන ස්වල්පයක් කථා කරන්නට අවස්ථාව ලබාදීම ගැන ඔබතුමාට මා ස්තුතිවන්ත වෙනවා.

1987 අංක 15 දරන ප්‍රාදේශීය සභා පනත වතුකරය තුළ සංවර්ධන කටයුතු කරගෙන යාමට දැඩි බාධාවක් ඇති කර ඇති පනතක් විධියටයි තිබෙන්නේ. නුවරඑළිය දිස්ත්‍රික් පාර්ලිමේන්තු මන්ත්‍රී මා හිතවත් තිලකරාජා මැතිතුමා ඒ පිළිබඳ විස්තරාත්මක තොරතුරු මේ ගරු සභාවට එළිදරවු කළා. මේ පනත භාවිත කරමින් විසුරුවන තත්ත්වයකට පත් වූ මෙම ප්‍රාදේශීය සභාව මම නියෝජනය කරන මහනුවර දිස්ත්‍රික්කයේ උඩ පළාතයි. එම නිසා මේ යෝජනාව ස්ථිර කරමින්, ඒ ගැන කථා කරන්න ලැබීම ගැන මා සන්තෝෂ වෙනවා.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க,*
## *பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்*

---

*(2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, செத்தெம்பர் மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க,**
**பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்**

[2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ- ஓ 3/2016

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) (xiv) என்னும் பந்தியில், "கிராம வேலைகளை நிருமாணிப்பதிலும் மாற்றுவதிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கிராம வேலைகளை அல்லது தோட்டக் குடியிருப்புகளை நிருமாணிப்பதிலும் மாற்றுவதிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) (xxii) என்னும் பந்தியில், "தேர்ந்தெடுத்த கிராமங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்ந்தெடுத்த கிராமங்கள், தோட்டக் குடியிருப்புகள் என்பவற்றின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும், மீள இலக்கமிடப்பட்ட (1)ஆம் உட்பிரிவில், "ஒப்பந்தத்தைச் செய்யலாம்;

என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"ஒப்பந்தத்தைச் செய்யலாம்.";

(2) உட்பிரிவு (1) ஐ மீள இலக்கமிட்டதன் உடனடுத்துப் பின்னர், பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2) பெருந்தோட்டப் பிராந்தியங்களின் விடயத்தில், பிரதேச சபைகள் விசேட தீர்மானமொன்றை சேர்த்துக் கொண்டதன் மேல் அத்துடன் இயைபான தோட்டத்தின் நிருவாக அதிகாரிகளுடனான கலந்தாலோசனையுடனும், அந்தந்த பெருந்தோட்ட பிராந்தியங்களில் வதிவோரின் சேமநலனுக்கென அவசியமான வீதிகள், கிணறுகள் மற்றும் வேறு பொது வாழ்வசதிகளை அத்தகைய வதிவோருக்கு வசதியளிப்பதற்கு பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்தலாம்.

(3) (அ) உட்பிரிவு (1) அல்லது (2) இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட, பேணப்பட்ட அல்லது வசதிப்படுத்தப்பட்ட வீதிகளும், கிணறுகளும், பொது வாழ்வசதிகளும், தோதானவொரு சாசனத்தின் மூலம் பிரதேச சபைக்குரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பொது வீதிகளாகவும், கிணறுகளாகவும், பொது வாழ்வசதிகளாகவும் அமைத்துருவாக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) பிரதேச சபையானது, விடயத்துக்கேற்ப, தோட்டங்களின் அல்லது கைத்தொழில் முயற்சிகளின் சொந்தக்காரர்களை, இயைபான தோட்டங்களின் நிருவாக அதிகாரிகளை அல்லது அத்தகைய பெருந்தோட்டப் பிராந்தியங்களில் வதிவோரை, பிரதேசசபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறாக அத்தகைய வீதிகளின், கிணறுகளின் மற்றும் பொது வாழ்வசதிகளின்

நிர்மாணம், பேணுகை அல்லது வசதிப்படுத்துகைக்கான செலவுகள் தொடர்பில் அத்தகைய உதவுதொகையைச் செலுத்தும்படி தேவைப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா உதவுதொகைகளும் நன்மை பெறுகின்ற அத்தகைய காணிகள் மற்றும் பெருந்தோட்டப் பிராந்தியங்களின் மீது விதிக்கப்பட்ட விசேட வீதவரிகளாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் விதிக்கப்பட்டவொரு வீத வரியாக அவை அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்திற்காக, "பெருந்தோட்டப் பிராந்தியங்கள்" என்பது, வதிவுள்ள தொழிலாளர்கள் வதியும் அத்துடன் தேயிலை, இறப்பர், தென்னை, கறுவா, மிளகு, கராம்பு அல்லது எண்ணெய்கொள்மரம் ஆகியன பயிர் செய்யப்படும் மத்திய, ஊவா, சப்பிரகமுவ, தெற்கு, மேற்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ்வரும் தோட்டங்கள் எனப் பொருள்படும்.".

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*

# பிரதேச சபை திருத்தச் சட்டமும் மலையக தமிழ் சமூகம் உள்வாங்களும்

*"பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரை அவர்கள் மத்திய அரசின் நேரடியான கட்டுப்பாட்டினதும் மேற்பார்வையினதும் கீழ் இயங்கும் பிரதேசசபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தீர்மானமெடுக்கும் விவகாரங்களில் நேரடியாகப் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் மிக அரிதாகவே காணப்படுகின்றது. அரைகுறைவான பிரஜாவுரிமை அந்தஸ்து, அனைத்து ஆட்சிக்கட்டமைப்புகளிலும் தொடர்ச்சியாக உள்வாங்கப்படாமை, நீண்டகால நாடற்றத்தன்மை மற்றும் சட்டக்கொள்கை, பாரபட்சம் இவை அனைத்தும் இந்நிலைக்கு பங்களிப்புச் செய்துள்ளன."*

- கலாநிதி ரமேஷ் ராமசாமி -

LET US WORK FOR SOCIAL CHANGE

ISD


**Institute of Social Development (ISD)**

**No: 246/4, Ranawana Road, Katugastota 2080, Sri lanka**
**Tel : +94 81 207 1288**

**Email: kandyisd@sltnet.lk**
**www.isdkandy.org**
**https://www.facebook.com/isd-kandy**



9 786246 087012